விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 291 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 20 திங்கட்கிழமை (06.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA(Hons)
OCTOBER INTAKE 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
(C-4044)
SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna
021 7534 807

## ஐ.நா பேரவையில் தீர்மானம் 22 நாடுகள் கையொப்பம்


(ஜெனிவா)

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான மனித உரிமைகள் பேரவையின் ஆணையை நீடிப்பதற்கான திருத்தப்பட்ட வரைவில், இணை அனுசரணை வழங்க 22 நாடுகள் கையொப்பமிட்டுள்ளன.

கடந்த செப்ரெம்பர் தொடக்கத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரைவுத் தீர்மானத்தின் முக்கிய ஆதரவாளர்களாக ஐக்கிய இராச்சியம், கனடா, 16ஆம் பக்கம் பார்க்க

# ஐ.நா பேரவையில் ஆதரவு கோருகிறது இலங்கை

## நோர்வேயை வாலாஜப்படுத்த முயற்சி



(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் புதிய தீர்மானம் மீது இன்று திங்கட்கிழமை அல்லது நாளை செவ்வாய்க்கிழமை வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் பரபரப்பான பின்னணியில், அரசாங்கம் 02ஆம் பக்கம் பார்க்க

## "இனமோதல்" எனும் சொற்பதத்துடன்

# இணையனுசரணை நாடுகளின் பிரேரணை இன்று சமர்ப்பிப்பு

## வாக்கெடுப்பின்றி நிறைவேறும் வாய்ப்பு

*(ஜெனிவா)*

இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தலைப்பிலான புதிய பிரேரணையின் இறுதி வரைவில் "இனமோதல்" என்ற சொற்பதம் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது. *(02ஆம் பக்கம் பார்க்க)*

## திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

## சமுத்திரத் தீர்த்தமாடும் வல்லிபுர மாயவன்

(வல்லிபுரம்)

வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தில் இன்று வரலாற்றுச் சிறப்புமிக்க சமுத்திரத் தீர்த்த உற்சவம் இடம்பெறவுள்ளது.

வங்கக்கடற்கரையில் மாலை 05.00 மணிக்கு 15ஆம் பக்கம் பார்க்க

## புன்னாலைக்கட்டுவனில்

## வாகன விபத்து; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் பலாலி வீதிப்பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

பலாலி நோக்கிப் பயணித்த இராணுவ வாகனத்தை லொறி ஒன்று முந்த 15ஆம் பக்கம் பார்க்க

## தொழிலாளி மீது கடும் தாக்குதல்

### காணொளியில் அதிர்ச்சி

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறுப் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்துத் தொழிலாளி ஒருவரைத் தாக்குகின்ற சம்பவம் இணையத்தளங்களில் வெளியாகி பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. 16ஆம் பக்கம் பார்க்க

## போதைவஸ்துக்களுடன் குருநகரில் ஒருவர் கைது



15ஆம் பக்கம் பார்க்க

## பாதாளக்குழுவுடன் டீல் வைத்த அரசியல்வாதிகளே பதறுகின்றனர்

### அமைச்சர் ஆனந்த விஜேபால சாடல்



(கொழும்பு)

பாதாள உலகக் குழுவுடன் டீல் வைத்திருந்த அரசியல்வாதிகள் கலக்கமடைந்துள்ளமை அவர்களின் செயற்பாடுகள் வாயிலாக நன்கு புலப்படுவதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு 15ஆம் பக்கம் பார்க்க

## மாங்குளத்தில் மனித எச்சம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் நகரப் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் மனித எலும்புக்கூடு ஒன்று நேற்று முன்தினம் (04) அடையாளம் காணப்பட்டுள்ளது. 15ஆம் பக்கம் பார்க்க

## ஏழாலையில் கத்திக்குத்து; வர்த்தக உரிமையாளர் பலி

(ஏழாலை)

யாழ்ப்பாணம் ஏழாலை கிழக்குப் பகுதியில் வர்த்தக நிலையமொன்றில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிந்ததில் குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதில் சிங்காரவேல் தானலன் (வயது-35) என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

இதுகுறித்து மேலும் தெரியவருகையில்,

ஏழாலை கிழக்குப் பகுதியில் இயங்கிவரும் குறித்த 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையனுசர...

இப்பிரேரணை இன்று (06) ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவிருப்பதுடன், தீர்மானம் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் கடந்த செப்ரெம்பர் 8 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது.

இக்கூட்டத்தொடரில் நிறைவேற்றும் நோக்கில், பிரிட்டன் தலைமையில் கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணையனுசரணை நாடுகளால் "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் முதலாவது வரைவு கடந்த செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அப்பிரேரணை தொடர்பில் கடந்த மாத நடுப்பகுதியில் உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடலில் பங்கேற்ற இலங்கையின் பிரதிநிதிகள் தமது மாற்று அபிப்பிராயங்களை முன்வைத்திருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை தொடர்பான இணையனுசரணை நாடுகளின் புதிய பிரேரணை முதலாம் கட்ட மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு, திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட பிரேரணை கடந்த மாத இறுதியில் வெளியிடப்பட்டது.

அதன்படி அத்திருத்தப் பிரேரணையில் மோதல்கள் என்ற சொல்லின் ஊடாக இனமோதல் எனும் சொற்பதம் பதிலீடு செய்யப்பட்டிருப்பதுடன் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட சட்டவாதியின் பங்கேற்புடனான பிரத்தியேக நீதித்துறைப் பொறிமுறையொன்றை நிறுவுவது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்த விடயம் முற்றாக நீக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் அத்திருத்தப் பிரேரணை பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்கான கோரிக்கையை நீர்த்துப் போகச்செய்யும் விதமாக அமைந்திருப்பதாகப் பல்வேறு தரப்பினராலும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

அதனையடுத்து இன்றையதினம் (6) சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையின் இறுதி வரைவில் "இனமோதல்" என்ற பதம் மீண்டும் சேர்க்கப்பட்டிருப்பதுடன், அதுசார்ந்த விடயதானம் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

"இனமோதல்களின் விளைவாக இலங்கை முகங்கொடுத்த மிகமோசமான துன்பங்களை இலங்கை அரசாங்கம் அங்கீகரித்தமையையும், பிரிவினையை ஏற்படுத்தக்கூடிய இனவாத அரசியலுக்கு இடமளிக்காமல் இருப்பதற்கான அதன் கடப்பாட்டையும், ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதுடன் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் வரவேற்கின்றோம்" எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் இப்பிரேரணை இன்று திங்கட்கிழமை (6) பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதன்போது பேரவையில் இப்பிரேரணையின் உள்ளடக்கத்தை நிராகரித்து இலங்கை எதிர்ப்பை வெளிப்படுத்தினாலும், அப்பிரேரணையை நிறைவேற்றுவதற்கு வாக்கெடுப்பைக் கோராது என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி இன்று இப்புதிய பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் பட்சத்தில், அத்தீர்மானத்துக்கு அமைய உயர்ஸ்தானிகர், இலங்கை தொடர்பில் பேரவையின் 63 ஆவது கூட்டத்தொடரில் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஐ.நா...

சர்வதேச அளவில் ஆதரவு திரட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் தலைமையில் ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கைத் தூதுக்குழு, அமெரிக்கா, நோர்வே உள்ளிட்ட முக்கிய மேற்குலக நாடுகள் மற்றும் நட்பு நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து ஒத்துழைப்புக் கோரியுள்ளது.

குறித்த இலங்கைத் தூதுக்குழுவினால் ஜெனிவா விவகாரத்தில் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக சுமார் 20 நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்த இராஜதந்திர நகர்வை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியது.

குறிப்பாக இராஜதந்திர ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நாடான நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளுடன் சுமார் ஒரு மணித்தியாலம் வரை கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட இலங்கையின் இராஜதந்திரிகள் பங்கேற்றிருந்தனர்.

புதிய தீர்மானத்தின் மூலமாக முன்வைக்கப்பட்ட பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு போன்ற விடயங்களில் அரசாங்கம் தற்போது முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்துத் தெளிவாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் மீதான சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையைப் பெறுவதே இந்தக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாக இருந்தது.

சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை எதிர்கொண்டு இலங்கைக்கு ஆதரவு திரட்டும் முயற்சியின் ஒரு பகுதியாக, ஜனாதிபதி அநுரவின் தூதுக்குழு நோர்வேயிடம் முக்கிய வாக்குறுதிகளையும் உத்தரவாதங்களையும் அளித்துள்ளது.


அதாவது, தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தை கூடிய விரைவில் இரத்துச் செய்து, அதற்குப் பதிலாகப் புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்றும் அரசாங்கம் உறுதியளித்தது.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா.காணாமலாக்கப்பட்டோர் குழுவின் 29 ஆவது அமர்வில் தெளிவுபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


### FORKLIFT சாரதி தேவை

FORKLIFT வாகன சாரதி உடன் தேவை.


CLAMP MODEL FORKLIFT



076 097 3121


## மரண அறிவித்தல்

பிறப்பு 25 - 01 - 1937



இறப்பு 05 - 10 - 2025

### விநாயகமூர்த்தி சண்முகநாதன்

யாழ்.கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் பலாலி கிழக்கை வசிப்பிடமாகவும் சுண்டுக்குளி விதானையார் வீதியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி சண்முகநாதன் நேற்று (05.10.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகேஸ்வரி (கொக்குவில்), சறோஜினி தேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நவரட்ணம், அரியரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சபேசன் (பிரான்ஸ்), சசிரேகா (ஆசிரியர் - யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்), சசிகலா (ஆசிரியர் - யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), சுரேசன் (யாழ்ப்பாணம்), சசிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகனச்செல்வன் (சுண்டிக்குளி), சுமதி (சிறுப்பிட்டி), ஸ்ரீதரன் (யாழ்ப்பாணம்), மயூரன் (பருத்தித்துறை), வளர்மதி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யானுயன், பிரகஷ்வினி, கவிநயன், கரிஷன், பிளசிகா, ருக்ஷன், ருத்வின், ஆர்யன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2025) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 02.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

074 0011046,
077 977 3753

தகவல் :
குடும்பத்தினர்

(5569)

## நினைவஞ்சலிகள்

3 ஆம் ஆண்டு 17 ஆம் ஆண்டு



அமரர் தாமு வீரசிங்கம்

அமரர் வீரசிங்கம் தெய்வநாயகி

திதி : புரட்டாதி பௌர்ணமி (06.10.2025)

எம் இரு விழிகளாய் இருந்து
ஒளியூட்டிய எம் அன்புத் தெய்வங்கள்
அன்பு தந்து நாமுயர நல்வழிப்படுத்தினீர்கள்
பண்பாளராய் பாரினில் வாழ்ந்தீர்கள்
எமைப்பிரிந்து ஆண்டுகள் பல சென்றாலும்
எம் மனதிருத்தி பூசிப்போம் உங்களை அனுதினமும்

கௌரி கோட்டம், அல்வாய். (C-4042) குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கல்வியில் அரசியல் தலையீடு வேண்டாம்"

## அரசுக்கு எதிராக ஆசிரியர்கள் போராட்டம்

(வவுனியா) ..........................

**பல்வேறுகோரிக்கைகளை வலியுறுத்தி இலங்கை ஆசிரியர்சங்கத்தினரால் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர்சங்கப் பகுதியில் ஆரம்பமான குறித்த பேரணி மணிக்கூட்டுகோபுர சந்தியை அடைந்ததுடன் அங்கு ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுபோதினி அறிக்கையின் நிலுவை சம்பளத்தை வழங்கு, தரமான கல்விக்கு வளங்களை சரியாகப் பகிர்ந்தளி, கல்வியில் அரசியல் தலையீட்டை நிறுத்து, பயங்கவராதத் தடைச்சட்டத்தை ஒழி, அதிபர், ஆசிரியர்களை வீதியில் நிறுத்தாதே! போன்ற கோசங்களை முன் வைத்திருந்ததுடன், பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். (க-8)

# கைதடி ஊரியான் வீதி தற்காலிகமாக மூடப்படுகிறது


## தவிசாளர் குகதாசன்

(சாவகச்சேரி)

கைதடி ஊரியான் வீதியானது வீதிப்புனரமைப்புப் பணிகளுக்காக இன்று திங்கட்கிழமை தொடக்கம் மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்படவிருப்பதாகச் சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் பொ. குகதாசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணசபைக்கு அருகாமையில் இருக்கும் ஊரியான் வீதி ஏ-9வீதிப் பக்கமாக தற்காலிகமாக மூடப்பட விருப்பதால் அவ் வீதியின் பயன்பாட்டாளர்கள் கோப்பாய்-கைதடி வீதியின் ஊடாக ஊரியான் வீதியைப் பயன்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-8-30)



2025 ஆம் ஆண்டிற்கான சிறுவர் தினமானது "உலகை வழி நடாத்த அன்பால் போஷியுங்கள்" எனும் தொனிப் பொருளில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. சிவகரன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை குழந்தை நல வைத்திய நிபுணர் ந. ஸ்ரீசரவணபவானந்தன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# பொலிஸ்மா அதிபருக்கு புதிய அதிகாரம்

## வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரம் வழங்கும் வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் இந்த வர்த்தமானி, பெரும்பாலும் வெளியிடப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பான அதிகாரங்கள் முன்னதாக பொலிஸ் ஆணைக்குழுவிடம் இருந்தன,

அதன்படி, குறித்த வர்த்தமானி வெளியானதின் பின்னர் இந்த அதிகாரங்கள் பொலிஸ்மா அதிபரின் வசமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# விமல் வீரவன்ச

## விசாரணைக்கு அழைப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, இன்று திங்கட்கிழமை தங்காலை பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு அழைக்கப்பட்டுள்ளார்.

பெலியத்தே சனா என்ற நபரை ஜனாதிபதியுடன் தொடர்புபடுத்தி ஊடகங்களுக்கு அளித்த கருத்து தொடர்பான உண்மைகளை விசாரிப்பதற்காகவே அவர் அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அதன்படி, இன்று தங்காலை பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.



தங்காலை சீனிமோதரவில் போதைப்பொருள் கண்டுபிடிப்பு சம்பவம் தொடர்பாகத் தனது படகுடன் கைது செய்யப்பட்ட பெலியத்தே சனா, 9 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# செம்மணி அகழ்வை துரிதப்படுத்துக

## இன்று யாழில் மாபெரும் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திற்கு முன்பாக அமைதிவழிப் போராட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை நடை பெறவுள்ளதாக வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க செயலாளர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று யாழ் பேருந்து நிலையத்தின் முன்பாக செம்மணி புதைகுழி அகழ்வு தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கக்கோரி, அமைதி வழி போராட்டம் ஒன்றை மேற்கொள்ள உள்ளோம்.

இந்தப் போராட்டத்திற்கு அனைத்து சமூக மட்ட அமைப்புகள், சர்வமத அமைப்புகள், சிவில் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சி சார்ந்த அனைவரையும் பலம் சேர்க்கும் வகையில் இணைந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-8-316)

# சிக்கிய தொலைபேசிகள் சிக்கலில் அரசியல்வாதிகள்

(கொழும்பு)

தொடர்ச்சியாக தென்னிலங்கையில் முன்னெடுக்கப் படுகின்ற கைதுகளில் பல முக்கியமான விடயங்கள் வெளிவந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

அதிலும், பாதாள உலக கும்பலை சேர்ந்த கெஹல் பத்ர பத்மேயிடமிருந்து கிடைக்கக்கூடிய தகவல்கள் தென்னிலங்கையில் மட்டுமில்லாது வடக்கு-கிழக்கிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

பாதாள உலகக்கும்பலை சேர்ந்த கெஹல் பத்ரபத்மே 31 தொலைபேசிகளை பயன்படுத்தி பல்வேறு நபர்களுடன் தொடர்புகளை பேணிவந்துள்ளதாக தெரியவருகின்றது.

இந்த 31 தொலைபேசி அழைப்புகளில் அரசியல்வாதிகளும் அடங்குகின்றனர், அதில் வடக்கு - கிழக்கிலுள்ள அரசியல்வாதிகளும் உள்ளடங்குவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (க-8)

# மார்பக புற்றுநோயைக் கண்டறியும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(கருமபுரம்)

மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு இந்திரா புற்றுநோய் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் மார்பகப் புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிவது குறித்த விழிப்புணர்வு நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி. ஆனந்தசங்கரி, மதத் தலைவர்கள், மருத்துவ நிபுணர்கள், இந்திரா புற்றுநோய் அறக்கட்டளை அதிகாரிகள் , பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் மார்பகப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதற்கான நடைமுறைகள் குறித்து மருத்துவர்கள் விளக்கமளித்ததுடன், விருப்பமுடையோர் மூடப்பட்ட கூடாரங்களிற்குள் மருத்துவ பரிசோதனைகளையும் மேற்கொண்டனர்.

மார்பக சுய பரிசோதனை பற்றிய செய்தியை பொது மக்களிடம் கொண்டு செல்லும் முகமாக இருபாலாருக்குமான நீச்சல், சைக்கிள் ஓட்டம் ஆகிய போட்டிகளும் நடைபெற்றன.

மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் ஆரம்ப நிலையில் கண்டறிதலை ஊக்குவிக்க உதவும் வகையில் நடைபெற்ற இப் போட்டிகளில் பங்கு பற்றியவர்களுக்கு பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

மார்பகப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அதற்கான சிகிச்சையை விரைவாக ஆரம்பத்திலேயே மேற்கொண்டால் சிறப்பான விளைவுகளைப் பெறமுடியும். முன்கூட்டியே கண்டறிதல் மார்பக புற்றுநோயிலிருந்து விரைவாக குணமடைய வழி வகுக்கும் என மருத்துவர்கள் விளக்கமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரை நீந்தி சாதனை படைத்த மாற்றுத்திறனாளி சிறுவன்



இயலாமைக்கும் சாதனைக்கும் உள்ள தூரத்தை நீந்தி கடந்து சாதனை படைக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் முழங்காலுக்கு கீழே பாதிக்கப்பட்ட 12 வயது மாற்றுத்திறனாளி சிறுவன் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை தலைமன்னாரிலிருந்து தனுஷ் கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை 9 மணி 11 நிமிடத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார்.

இதுவரை 30 இற்கும் மேற்பட்டோர் பாக் ஜலசந்தியை தனியாக நீந்தி கடந்து சாதனை புரிந்துள்ளனர். இந்நிலையில் சென்னை முகப்பேர் மேற்கு பகுதியைச் சேர்ந்த பெரியார் செல்வன், பத்மபிரியா தம்பதியினரின் 12 வயதான புவி ஆற்றல் என்ற சிறுவன் முகப்பேர் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் எட்டாம் வகுப்பு பயின்று வருகிறார்.

முழங்காலுக்கு கீழே பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி சிறுவன் புவி ஆற்றல் 2022 ஆம் ஆண்டு சென்னை, செனாய் நகரில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வழிகாட்டுதலோடு தன்னுடைய நீச்சல் பயிற்சியை தொடங்கினார். 2024 ஆம் ஆண்டு கோவாவில் நடைபெற்ற தேசிய அளவிலான நீச்சல் போட்டிகளில் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்றுள்ளார்.

தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கு நீந்தி கடப்பதற்காக இந்திய-இலங்கை இரு நாட்டு அரசிடம் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார்.

அனுமதி கிடைத்த நிலையில், நீந்துவதற்கு ஊனம் தடையல்ல என்பதை வலியுறுத்துவதற்காக இலங்கை-தலைமன்னாரில் இருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை 2.45 இற்கு கடலில் குதித்து நீந்த தொடங்கி மதியம் 12 மணி அளவில் தனுஷ் கோடி வந்தடைந்தார். இவர் தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரை 9 மணி நேரம் 11 நிமிடத்தில் நீந்தி சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்னதாக தலைமன்னார், தனுஷ்கோடி இடையிலான பாக்கு நீரிணை கடற்பகுதியை 20.03.2022 அன்று மும்பையைச் சேர்ந்த ஒட்டிசத்தால் பாதிக்கப்பட்ட சிறுமி ஜியா ராய் தனது 13 வயதில் நீந்திக் கடந்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-285-104)

# இலங்கை கிரிக்கெட் அணிக்கு புதிய பயிற்சியாளர்கள் நியமனம்



இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தேசிய கிரிக்கெட் அணிக்கு இரு முக்கியப் பயிற்சியாளர்களை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது.

அந்த வகையில், துடுப்பாட்ட பயிற்சியாளராக ஜூலியன் வூட் நியமிக்கப்பட்டுள்ளதுடன், சுழற்பந்து வீச்சுப் பயிற்சியாளராக ரெனே ஃபெர்டினாண்ட்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

துடுப்பாட்டப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள, ஜூலியன் வூட் இற்கு ஒக்டோபர் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், ஓராண்டு காலத்திற்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

'பவர் ஹிட்டிங் திட்டத்தை' உருவாக்கியவர் வூட். இவர் துடுப்பாட்ட நுட்பங்களை நவீன பயிற்சி முறைகள் மற்றும் உயிரியக்கவியல் உடன் ஒருங்கிணைத்து வீரர்களின் துடுப்பாட்டத் திறனை அதிகரிக்கச் செய்வதில் சிறந்தவர்.

சுழற்பந்து வீச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள, ரெனே ஃபெர்டினாண்ட்ஸ் இன் நியமனம் செப்ரெம்பர் 30ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது.

மணிக்கட்டு மற்றும் விரல் சுழற்பந்து இரண்டிலும் நிபுணத்துவம் பெற்ற ரெனே ஃபெர்டினாண்ட்ஸ், இதற்கு முன்னர் நியூசிலாந்து கிரிக்கெட்டுக்கு உயிரியக்கவியல் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். அங்கு அவர் முன்னணி பந்து வீச்சாளர்களுக்கு செயல்திறன் மதிப்பீடுகள் மற்றும் உபாதை அபாய மதிப்பீடுகளை மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (3)




தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் இலங்கை இளைஞர்கள் கழக சம்மேளனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த 35 ஆவது தேசிய இளைஞர்கள் விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது ஓட்டம், குண்டெறிதல், தட்டெறிதல், உதைபந்தாட்டம், கயிறுழுத்தல் உட்பட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்று போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு வெற்றிக் கேடயங்கள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பன வழங்கிவைக்கப்பட்டன.

(படங்கள்: சிவசாந்தன்)

## மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட்

# இலங்கை-அவுஸ்திரேலிய போட்டி

# மழை காரணமாக ரத்து



13 ஆவது மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது. இதில் இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா, நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய 8 அணிகள் பங்கேற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல்-4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

இந்தத் தொடரில் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற இருந்த 5 ஆவது லீக்கில் நடப்பு சம்பியனான அலிசா ஹீலி தலைமையிலான அவுஸ்திரேலிய அணி, சமாரி அத்தபத்து தலைமையிலான இலங்கையை எதிர் கொள்ள இருந்தது.

இந்த நிலையில் கனமழை பெய்ததால் நாணயசுழற்சி கூட போட முடியாமல் போட்டி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதனால் ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்தனர். (3)

# ஹொக்கி இறுதிப்போட்டி

யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கம் நடத்தும் மகேஸ்வரன் சவால் கிண்ணத்திற்கான யாழ் மாவட்ட ஹொக்கிச் சங்கம் போட்டி இன்று திங்கட்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக பேராதனைப் பல்கலைக் கழக ... இலங்கை ஹொக்கிச் சங்கத்தின் உபதலைவருமான ஆர்.மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக முன்னாள் இலங்கை ஹொக்கிச் சங்கத்தின் உபதலைவர் ரி.காண்டீபன், கௌரவ விருந்தினராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் உடற்கல்வி பணிப்பாளர் ஆர்.குகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (3-90)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# யா/வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

## தீர்த்தோற்சவ சிறப்பிதழ் -06.10.2025

### அவதாரமாய் அவதரித்து அருளாட்சி செய்கின்ற அச்சுதனே வணங்குகிறோம் உன் அடியை



சரித்திரப்பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர அழ்வார் சுவாமியின் கொடியேற்றம் 2025 புரட்டாதி மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்திரு விழாக்களில் முக்கியமானதும் சிறப்பாகவும் விளங்குவது சமுத்திரத் தீர்த்த திருவிழா ஆகும். இன்றையதினம் மிகவும் சிறப்பு வாய்ந்த புனித மான நன்நாளாகும். வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ வல்லிபுர சக்கர ரூப மாயவனின் சமுத்திரத் தீர்த்த தினமாகும்.

வங்கக்கடலின் கற்கோவாளப் பதிக்கரையில் மச்ச அவதாரமாக அவதரித்து சக்கரவடிவமாக மாறி வல்லிபுர ஆலயத்தில் குடி கொண்டிருந்து அருள் பாலிக்கும் மாயவனின் சிறப்பு வாய்ந்த தினமாகும்.

சங்கு, சக்கரம், வில்லு, தண்டாயுதம், வாள் ஆகிய ஐந்தும் எம்பெருமான் ஸ்ரீ மகா விஷ்ணுவின்·பிரதான ஆயுதங்களாகும். இவற்றைப் பஞ்சாயுதம் என்றும் கொள்வர். அண்ட சராசரங்களையும் காத்து அருள்புரியும் எம்பெருமான் அவற்றை இந்த ஐந்து ஆயுதங்களின் மூலமே செய்வதாக புராணங்கள் கூறும். பஞ்சாயுதங்களுள் முதன்மையானது "ஆழி அல்லது சக்கரம்" ஆகும். இதனை சுதர்சனம் என்றும் அழைப்பர்.

இது பகவானது வலது கையில் இருப்பதனால் மகாவீரம் வாய்ந்ததாகும் எதிரிகளைத் தயவு தாட்சணியமின்றி அழிப்பதால் "ருக்ரம்" வாய்ந்ததாகும். இவர் பகவானுடைய கட்டளைக்காகக் காத்திருந்து நித்திய சேவை புரிவதால் "சக்கரத்தாழ்வார்" என்றும் போற்றப் படுகின்றார். இவரை வணங்குவதால் எதிரிகள் தோற்கடிக்கப் படுவதுடன் பேய், பிசாசு, பில்லி, சூனியம், நோய் நொடிகளும் விலகி விடுகின்றன.பகவானது ருத்ர அவதாரமானது நரசிம்மத்தின் அம்சமே சுதர்சனம் என்றும் கொள்வர்.

பகவான் துஷ்டர்களை அழிப்பதற்கும் பக்தர்களை காப்பதற்கும் யுகம் தோறும் அவதரிப்பதுடன் பத்தர்களுக்கு நித்திய அனுக்கிரகம் செய்வதற்காக இப்பூவுலகின் பல்வேறு பாகங்களிலும் அச்சாவதார மூர்த்தியாய் தோன்றி அருள்பாலிக்கின்றார்.

அவ்வாறு தோன்றிய திவ்ய சேத்திரம்தான் ஈழத்தின் ஸ்ரீ வல் லிபுரம் ஆகும்.

வல்லிபுரத்தில் கோயில் கொண்டபடியினால் வல்லிபுரநாதன் எனவும் பெயர் வழங்கப்படுகின்றது.பகவானை முழுமையான திவ்ய சொரூபத்தில் வணங்குவதற்கு பல கடுமையான சாஸ்திர சம்பிர தாயங்கள் இருப்பதால் மிக இலகுவாக எளிமையான பக்தி சேவையினால் இறைவனைத்துதிப்பதற்கு அவர்களது ஆயுத வழிபாடு துணைபுரிகிறது.

**சாமஸ்ரீ தேசமானிய Lion த.ஜெயரூபன்- சமாதான நீதவான், கணக்காய்வாளரும் வருமானவரி ஆலோசகரும் மதங்களுக் கிடையிலான சமாதான அமைப்பு மற்றும் அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் உறுப்பினர், சமூகசேவையாளர்- கற்கோவளம்.**

## பிரதம குருவின் நல்லருள் ஆசிகள்



நிகழும் மங்களகரமான விசுவாவசு வருஷம் புரட்டாதி மாதம் 05ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (21-09-2025) ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமியின் மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் நேற்றைய தினம் 05-10-2025 ஞாயிற்றுகிழமை ஆணவம்,கன்மம்,மாயை என்று சொல்லப்படுகின்ற எமது மும் மலங்களை அழிக்கும் வண்ணம் எம்பெருமானின் இரதோற்சவம் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இன்றைய தினம் 06.10.2025 திங்கட்கிழமை எமது ஆலய வரலாற்றுடன் தொடர்புடைய அதி முக்கியத்துவம் வாய்ந்ததும் சமுத்திரதீர்த்த உற்சவம் எம்பெருமாள் திருவருளால் இந்து மகா சமுத்திரத்தில் சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது.மாலை நேரத்தில் "சங்கரரூப மாயவர்" அவதரித்த இடத்திலே கடலாடல் திருவிழா நடைபெறுவது சிறப்பு வாய்ந்தது ஆகும்.

எனவே எல்லாம் வல்ல வல்லிபுரமாயவன் தாழ்பணிந்து பெருமைமிகு மாயவனின் சமுத்திரதீர்த்தத்தில் கலந்து சிறப்பித்துக் கொள்ளும் அடியார்க்கும், வரமுடியாமல் மாயவன் துதிபாடும், புகழ்பாடும் அடியவர்க்கும் சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வு தருவார் வல்லிபுரத்தான்.

"சர்வம் விஷ்ணு மயம் ஜெகத்" லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

**பத்ம நிவாஸ பூஜிதர்**
**பிரம்மஸ்ரீ சுதர்ஸன கணபதீஸ்வரக்குரு (பிரதமகுரு)**
**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்**

## உயர்வர மளிப்பாய் தேவே

அலைமேவும் கடலில் ஆவலொடு நீராடும்
ஆயர்குலக் கண்ணா ஆழ்கடல் வண்ணா
தலையாய துன்ப துயரங்கள் நீங்க
தாவிலாவுன் அடிதன்னைத் தொழுது வணங்கி
குலையாத அழகோடு பொலிவான பந்தற்கீழ்
கூடிப் பணிவோர் குறைகளையும் கோபாலா
கலைமேவும் கற்கோ வளநகர் மக்கள்
காரியம் யாவினும் கைகொடுக்கும் கண்ணா
உளையாத வாழ்வுபெற் றுயரும் வண்ணா
ஊக்கமது தந்து உயர்வர மளிப்பாய் தேவே.

**கலாபூஷணம் மு.தணிகாசலம்,கற்கோவளம்.**


சிறீரங்கம் ரெக்ஸ் ரைல்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி,
NTB வங்கிக்கு அருகில்
கிளை-1 வதிரி வீதி, உடுப்பிட்டி.
(C-4034)

விக்னேஸ்வரா திருமண மண்டபம்
Room, Hall A/C Facility
Conferene Hall With 200 Seating Capacity
யாழ்.பிரதான வீதி, வல்வை.
தொ.பே: 021 226 1567
(C-4039)


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வர்லாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மகோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றைய தினம் பல்லாயிரக்கணக்கான பக்த அடியவர்கள் புடைசூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்- சிவசாந்தன், கஜிந்தன்,மகாலிங்கம்)

# முல்லைத்தீவில் கசிப்பு உற்பத்தி; 280 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு தேவிபுரம் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேவிபுரம் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் புதுக்குடியிருப்பு பொலிஸார் அதிரடி நடவடிக்கையினை மேற்கொண்டு கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டுள் ளனர்.

இதில் 8 பரல்களில் ஆயிரத்து 280 லீற்றர் கோடா, 100 லீற்றர் கசிப்பு மற்றும் சுருள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் தேவிபுரம் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபரை முல்லைத் தீவு நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞர் கடந்த மார்ச் சமாதம் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு தண்டனையும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8-299)

# வீட்டின்மீது பெற்றோல்குண்டு வீச்சு அச்சுவேலி பகுதியில் அடாவடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சு வேலி பகுதியில் வீடொன்றின் மீது வன்முறைக் கும்பல் ஒன்று தாக்குதல் மேற்கொண்டு, பெற்றோல் குண்டு வீசி விட்டு தப்பி சென்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, பத்தைமேனி பகுதியில் உள்ள வீடொன்றுக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற வன்முறைக் கும்பல் ஒன்று வீட்டின் கதவுகளை உடைத்து உள்ளே செல்வதற்கு முயற்சித்துள்ளனர். வீட்டில் இருந்தோர் உட்பக்கமாக கதவுகளை மூடி விட்டு கூக்குரல் எழுப்ப, தாக்குதலாளிகள் வீட்டின் மீது பெற்றோல் குண்டுகளை வீசிவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்ததுடன்மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (க-8-33)

# வவுனியா மாவட்டத்தில் பெரும்போக நெற் செய்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபன் தெரிவித்தார்.

இம்முறை வவுனியா மாவட்டத்தில் 25 ஆயிரத்து 425.37 ஹெக்டேயர் நெற் செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தோடு வவுனியா மாவட்டத்தில் உள்ள 12 கமநல சேவை மையங்களும் விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் இம்மாதம் நெல் விதைப்பு நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (8-250)

# காங்கேசன்துறை - நாகபட்டினம் படகுசேவை வாரத்தில் அனைத்து நாளும்

(அராலி)


காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையிலான பயணிகள் கப்பல் சேவையானது வாரத்தில் அனைத்து நாட்களும் இடம்பெறும் என சிவகங்கை கப்பல் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கே.எம்.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் செவ்வாய்க்கிழமை தவிர்ந்த ஆறு நாட்களும் குறித்த படகுச் சேவை இடம்பெற்று வந்த நிலையில் தீபாவளியை முன்னிட்டு 8ஆம் திகதிமுதல் இந்த மாதம் 28ஆம் திகதி வரை தினமும் கப்பல் சேவை இடம்பெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

இக்கப்பல் சேவையில் தீர்வை அற்ற கடைத் தொகுதியும் புதிதாக இணைக்கப்பட்டுள்ளது.

www.sailsubham.com என்ற இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதனூடாகவோ அல்லது 021 222 4647, 011 764 2117 என்ற இலக்கங்களுக்கு அழைப்பு மேற்கொள்வதன் மூலமாகவோ பயணச்சீட்டுக்களை பதிவுசெய்துகொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-8-104)

# ஆசிரிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 45 ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப்பத்திர சான்றிதழ் வழங்கும் விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இசுறுபாய கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கான பணிப்பாளர் திருமதி ஸ்ரீமா தசநாயக்க கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவன அபிவிருத்திக்கான பணிப்பாளர் எஸ். குமார, நூலகத்திற்கான பணிப்பாளர் சரத் நந்தகுமார, கொட்டகல ஆசிரியர் கலாசாலையின் அதிபர் சு.பிரசாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-8-33)

# குப்பைக் கிடங்கில் கடலட்டைகள் தமிழக பொலிஸார் தீவிர விசாரணை

இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த சுமார் 10 இலட்சம் பெறுமதியான கடலட்டைகளை இந்திய பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தமிழ்நாடு இராமநாதபுரம் சக்கரக்கோட்டை நகராட்சி குப்பை கிடங்கு பகுதியில் இலங்கைக்கு கடத்துவதற்காக கடல் அட்டைகள் பதப்படுத்தி வருவதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று இரவு பொலிஸார் அப்பகுதியில் தீவிர சோதனை நடத்தினர்.

இதில் 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 250 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகளை பறிமுதல் செய்த பொலிஸார் கடல் அட்டைகளை பதுக்கி வைத்திருந்த ஒருவரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில் அவரிடம் நடத்திய விசாரணையில் தடை செய்யப்பட்ட கடல் அட்டைகளை தேவிபட்டினத்தில் இருந்து வாங்கி வந்து சக்கரகோட்டை குப்பை கிடங்கு அருகே உள்ள குடோனில் பதப்படுத்தி பின்கடல் வழியாக இலங்கைக்கு கடத்த திட்டமிட்டிருந்தது தெரிய வந்தது.

இதையடுத்து அந்த குடோனில் இருந்த இந்திய மதிப்பில் 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான 250 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் மற்றும் கடல் அட்டைகளை பதப்படுத்தும் பொருட்கள் உள்ளிட்டவற்றை பொலிஸார் பறிமுதல் செய்து இராமநாதபுரம் வனத்துறை அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

இராமநாதபுரம் புறநகர் பகுதியில் கடல் அட்டைகளை பதப்படுத்தி இலங்கைக்கு கடத்த பதுக்கி வைக்கப்பட்டிருந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (க-8-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட செயலகம் - கிளிநொச்சி

## கிளிநொச்சி விசேட பொருளாதார மத்திய நிலைய மொத்த விற்பனை நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பம் கோரல்

வர்த்தக வாணிப உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சினால் விவசாய உற்பத்திகளுக்கு நியாயமான விலையையும் வியாபாரிகளுக்கு போட்டிச்சந்தை வாய்ப்பு மற்றும் நுகர்வோருக்கு நியாயமான விலையையும் வழங்கும் நோக்குடன் கிளிநொச்சி கனகபுரம் வீதியில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் உள்ள மொத்த விற்பனை நிலையங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஏ9 வீதிக்கு அண்மையில் கனகபுரம் பிரதான வீதியில் அமைந்துள்ள இப்பொருளாதார நிலையமானது பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளது.

1. நாற்பது (40) கடைத்தொகுதி - 39 கடைத்தொகுதிகள் வியாபாரிகளுக்கு வழங்கப்படும்.
2. வாகனத்தரிப்பிட வசதி
3. நீர், மலசலகூடம் மற்றும் மின்சாரம் ஆகிய அடிப்படை வசதிகள்

பொதுவான முன்நிபந்தனைகள்

1. மொத்த வியாபாரத்திற்கு மட்டுமே கடைத்தொகுதிகள் குத்தகைக்கு வழங்கப்படும்.
2. கிளிநொச்சி மாவட்டத்தினை நிரந்தர வசிப்பிடமாகக்கொண்ட மொத்த வியாபாரிகளுக்கு 30 கடைகளும் மிகுதி 9 கடைகள் வடமாகாணத்தை சேர்ந்த மொத்த வியாபாரிகளுக்கும் வழங்கப்படும்.
3. தெரிவுசெய்யப்படும் மொத்த வியாபாரிகள் பாதுகாப்பு பிணைப்பணமாக மாதவாடகையின் பன்னிரண்டு (12) மாத வாடகைக்குச் சமமான தொகையினை திருப்பிச் செலுத்தத்தக்க தொகையாக செலுத்த வேண்டும். (அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் இந் நிலையத்தின் கடை ஒவ்வொன்றிற்குமான மாத வாடகை தீர்மானிக்கப்படும்.)
4. விண்ணப்பப் படிவங்களை 2025 ஐப்பசி மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் ஐப்பசி 17 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் 9.00 மணி தொடக்கம் 3.00 மணிவரை பிரதேச செயலகம், கரைச்சியில் மீள வழங்கப்படாத ரூபாய் 500.00 இனை முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்புச்சபை கணக்கிலக்கம் **0081063969**, இலங்கை வங்கி எனும் கணக்கிற்கு செலுத்தி பெறப்பட வேண்டும்.
5. தெரிவு செய்யப்படும் வியாபாரிகள் தெரிவு செய்யப்பட்டு ஒரு வாரத்திற்குள் வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டும்
6. வியாபாரத்தை ஆரம்பித்த பின்பு மாத வாடகையினை முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்புச் சபைக்கு உரிய மாதத்தின் 05ஆம் திகதிக்கு முன்பு செலுத்துதல் வேண்டும்.
7. மாத வாடகை உரிய காலத்தில் செலுத்தாத மாதத்திற்கு 10% தண்டப்பணத்தையும், மாத வாடகையையும் ஏற்கனவே செலுத்தப்பட்ட பாதுகாப்பு பிணைப் பணத்தில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
8. தொடர்ந்து 2 மாதவாடகை செலுத்தாத சந்தர்ப்பத்தில் 3ஆம் மாத தொடக்கத்தின் 05 ஆம் திகதிக்குள் கடைகள் நிர்வாகத்தினரால் கையேற்க நடவடிக்கை எடுக்கப்படும்.
8. 3 வருடத்திற்கு ஒரு தடவை விலை மதிப்பீட்டு திணைக்களத்தால் வாடகை மீள திருத்தம் செய்யப்படும்.
9. கடைகள் ஆகக் குறைந்தது ஒரு நாளுக்கு 8 மணித்தியாலங்கள் திறந்திருத்தல் வேண்டும். தொடர்ச்சியாக ஒரு வாரம் திறந்து இயங்காத கடைகள் 15 நாள் முன்னறிவித்தலுடன் கையகப்படுத்தப்படும்

கடைத்தொகுதியின் மாதிரி வரைபடம்




சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை **24.10.2025** ஆம் திகதிக்கு முன்னதாக பிரதேச செயலாளர், கரைச்சி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும்போது தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலைய மொத்த விற்பனை நிலையத்திற்கான விண்ணப்பம் எனக்குறிப்பிடப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பத்தை அடிப்படையாகக் கொண்டு நேர்முகத்தேர்வின் மூலம் விண்ணப்பதாரிகளின் வியாபாரத் தகுநிலை ஆராயப்பட்டே வியாபார நிலையம் வழங்கப்படும்

வர்த்தக வாணிப உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் உள்ள இந் நிலையமானது இதற்கென நியமிக்கப்பட்ட முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்புச்சபையின் ஊடாகவே நிர்வகிக்கப்படுகின்றது. எனவே, இச் சபைக்கு தலைவர் என்ற வகையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கே விண்ணப்பதாரரை தெரிவுசெய்யும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் உரித்தாகும்.

மேலதிக விபரங்களுக்கு 021 228 5739 அல்லது 077 668 1316 என்ற இலக்கத்தின் ஊடாக கரைச்சி பிரதேச செயலக திட்டமிடல் பிரிவைத் தொடர்புகொள்ள முடியும்.

**சு. முரளிதரன்,**
**அரசாங்க அதிபர் - மாவட்ட செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(C-4033)

# புதிய வீட்டுத்திட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 10 இலட்சம் பெறுமதியான 88 வீடுகளில் 80 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கும் நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பயனாளிகளிடம் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்டது.

அந்தவகையில், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் கோண்டாவில் நாக பூசணி அம்மன் கோவிலடியில் பயனாளி ஒருவருக்கு நிர்மாணிக்கப்பட்ட வீடு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் சம்பிரதாய பூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர், தேசிய மக்கள் சக்தியின் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-8-33)



(தருமபுரம்)

கிளி நொச்சி மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் வளமான நாடு அழகான எதிர்காலம் எனும் தொனிப்பொருளிலான 10 லட்சம் ரூபாய் பெறுமதியான 11 வீடுகள், வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் மருங்கன் மோகன் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினர், கிராம சேவையாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் 15 வருட காலமாக நிரந்தர வீடு இன்றி தவித்த மக்களுக்கு தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் ஊடாக 3 மாத கால பகுதிக்குள் விரைவாக புதிய ஓர் அழகான வீடு அமைத்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு மேலதிகமாக இன்னும் 51 வீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அதனையும் விரைவாக மக்களுக்கு வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். (க-8-316)


உ
சிவமயம்

குருதேவர் திருவடி வாழ்க
20 ஆவது ஜீவசமாதி தினம்

ஜனனம்
நூற்றிரெண்டாவது ஜனனம்
1923 . 06 . 21



ஜீவசமாதி
2005 . 09 . 17

20 ஆவது ஜீவசமாதி தினம்
2025 புரட்டாதி பூரணை
2025.10.06 திங்கட்கிழமை

அத்வைத பிரம்ம ஞான வித்தகர் தவத்திரு சர்வானந்தா சுவாமிகள்
(இயற்பெயர்-கந்தையா ஆறுமுகம்)

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங்கியஞானம்
உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தத் ரந்நிலையில்.

தனித்த ஏகாந்த இடத்தினில் சென்று
மனத்தினை பொறிவழி செல்லாதடக்கி
நினை பெரும் ஆசையாய் காற்றை விடுத்து
வனப்பெரும் ஆன்மாவில் இருப்பது ஞான நிட்டை.

மனிதன் பிறக்கும் போது ஆறு அறிவு ஜோகியாகும் போது ஏழாம் அறிவும் சித்தன் ஆகும்போது எட்டாம் அறிவும் ஞானி ஆகும்போது ஒன்பதாம் அறிவும் ஞான நிட்டை கைகூடும்போது பத்தாம் அறிவும் உண்டாகின்றது. ஒரு ஜீவன் பத்தாம் அறிவை பெறும் வரை மீண்டும் மீண்டும் மறுபிறப்பு என்கின்ற பிறவிப் பெருங்கடலில் மூழ்க வேண்டும் என்பது இயுற்கையின் நியதி. மனித தத்துவத்திலிருந்து சிவதத்துவம் என்றும் ஞான நிஷ்டையை பெறுவதற்கு "ஞானகுரு வாணிபதம் நாடு" ஞானகுருவின் உபதேசம் அவசியமாகின்றது 1904 ஆம் ஆண்டு கடையில் சுவாமி இந்தியாவில் இருந்து இலங்கை வந்து ஈழத்தில் ஞானவித்தை விதைத்து சார்ஜன் சுவாமி, கனகரத்தினம் சுவாமி, மகாதேவா சுவாமி, சச்சிதானந்த சுவாமி, சர்வானந்த ஆறுமுக சுவாமி என ஞானப்பரம்பரை வாழையடி வாழையாக இன்றும் வேரூன்றி ஞானத்தை பரப்புகின்றது. அண்மையில் எமக்கு ஞான உபதேசம் வழங்கியவர் ஸ்ரீமத் சர்வானந்த சுவாமிகள் ஆவார். ஈழத்தே சித்தர்களின் வழியில் நின்று நாமும் பத்தாவது அறிவாகிய பரமஅறிவை பெற்று பிறவிப் பெருங்கடலை கடப்போமாக. வேதாந்த பிரம்ம வித்தகர் சர்வானந்த சுவாமிகளின் இருபதாவது சமாதி தினம் புரட்டாதி மாத புரட்டாதி நட்சத்திரத்தில் பூரணை தினமாகிய திங்கட்கிழமை 6.10.2025 வவுனியா ஸ்ரீமத் சர்வானந்தா சுவாமிகள் குருபீடத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

**ஸ்ரீமத் சர்வானந்த சுவாமிகள் குருபீடம் வவுனியா.**
**தொ.பே.இல :077 840 0974**
**(ஆசிரியர் ஜெயகஜேஷ்)**

(1625)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## குடியுரிமை விவகாரம்

# ட்ரம்பின் உத்தரவுக்கு தடைவிதித்த நீதிமன்றம்



அமெரிக்காவில் பிறக்கும் வெளிநாட்டவர் குழந்தைகளுக்கு, பிறப்பால் குடியுரிமை வழங்குவதை ரத்து செய்ய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாக ரீதியான உத்தரவை பிறப்பித்திருந்தார்.

இதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில் கீழ் நீதிமன்றங்கள் பல ட்ரம்ப் உத்தரவுக்கு தடை விதித்தன.

இந்நிலையில் இதுதொடர்பான மேல்முறையீட்டு வழக்கு பாஸ்டனில் உள்ள ஃபெடரல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம், அமெரிக்காவில் தற்காலிகமாக தங்கியிருப்போருக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு பிறப்பால் குடியுரிமையை வழங்குவதை ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் ரத்து செய்ய முடியாது

குடியுரிமை என்பது ஒரு குழந்தையை பெற்றெடுத்த பெற்றோரின் செயல்களை அடிப்படையாக வைத்து முடிவு செய்வதாகும்.

ஒருவர் அமெரிக்காவில் பிறந்தார் என்ற உண்மை ஒன்றுதான் அந்த உரிமையை வழங்குகிறது என கூறி நீதிமன்றம் ட்ரம்ப் உத்தரவுக்கு விதித்த தடையை உறுதி செய்தது.

அமெரிக்க சட்டம், 14 ஆவது திருத்தத்தின்படி, குடியுரிமைப் பிரிவின் கீழ், அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகள் பிறப்பால் குடியுரிமைக்கு உரிமையுடையவர்கள் என்ற வாதத்தை ஏற்று, அந்த உரிமையை வழங்குவதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (க-8)

# இஸ்ரேலுக்கு உதவிய ஆறுபேருக்குத் தூக்கு

## நிறைவேற்றியது ஈரான் அரசு

(டெஹ்ரான்)

இஸ்ரேலின் சார்பாக தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் பேரில் ஈரானில் 6 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் இஸ்ரேலுடன் நடந்த 12 நாள் போரைத் தொடர்ந்து, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தங்களுக்கு எதிராக செயற்பட்டவர்களை சட்டத்தின்முன் நிறுத்துவதாக ஈரான் உறுதியளித்தது.

ஆனால், இஸ்ரேல் தொடர்பான வழக்குகளில் கட்டாய வாக்கு மூலங்களைப் பெறுவதாகவும், வெளிப்படைத்தன்மை இல்லாமல் விசாரணைகளை நடத்துவதாகவும் ஈரான் மீது மனித உரிமை ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தச் சூழலில், குஸிஸ்தான் மாகாணத்தில் இஸ்ரேலுக்காக காவலர்கள், பாதுகாப்பு படையினரைக் கொன்றதாகவும், குண்டுவெடிப்புகளைத் திட்டமிட்டதாகவும் கூறி 6 பேருக்கு கடந்த சனிக்கிழமை மரண தண்டனை நிறைவேற்றியுள்ளது ஈரான் அரசாங்கம். (க-8)



# முகப்புத்தகத்தில் அவதூறு ஒருவருக்கு மரண தண்டனை



(டியூனிஸ்)

சமூக ஊடகங்களில் ஜனாதிபதியை அவதூறு செய்தமைக்கும் பதிவுகள் மூலம் நாட்டின் தேசிய பாதுகாப்பை விமர்சித்தமைக்கும் டியூனீசிய நாட்டின் தொழிலாளி ஒருவருக்கு அந்நாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வட ஆபிரிக்க நாடான டியூனீசியாவில் 2021 ஆம் ஆண்டில் கைஸ் சயீத் ஜனாதிபதியான பின்னர் அனைத்து அதிகாரங்களையும் கைப்பற்றியதிலிருந்து கருத்து வெளியிடும் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

தண்டனை விதிக்கப்பட்ட 56 வயதான தினக்கூலி தொழிலாளி குறைந்த கல்வியறிவு கொண்ட ஒருவர் எனவும் கடந்த ஆண்டு கைது செய்யப்படுவதற்கு முன்பு ஜனாதிபதியை விமர்சிக்கும் பதிவுகளை எழுதி வந்தார் என்றும் அவரது வழக்கறிஞர் தெரிவித்தார்.

பேஸ் புக் பதிவுகள் தொடர்பான நபியூல் நீதிமன்ற நீதிபதி அவருக்கு மரண தண்டனை விதித்தார். இது ஒரு அதிர்ச்சியூட்டும் மற்றும் இதற்கு முன்னர் எப்போதும் இடம்பெறாத சம்பவம் என்றும் இத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படும் என்றும் [illegible] தெரிவித்துள்ளார். (க-8)

# குழந்தைகளின் உயிரைப் பறித்த இருமல் பாணி மருந்து



(டில்லி)

இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் இருமல் பாணி மருந்தை உட்கொண்டதனால் 6 குழந்தைகள் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து, தமிழகத்தில் இந்த மருந்து விற்பனைக்கும் விநியோகத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தற்காலிகத் தடை உத்தரவை தமிழக மருந்து கட்டுப்பாட்டுத் துறை பிறப்பித்துள்ளது.

மத்தியப் பிரதேச மாநிலம் சிந்த்வாரா மாவட்டத்தில், கடந்த 15 நாட்களுக்குள் 1 முதல் 7 வயதுக்குட்பட்ட 6 குழந்தைகள் அடுத்தடுத்து சந்தேகத்துக்குரிய வகையில் உயிரிழந்தன. திடீரென ஏற்பட்ட சிறுநீரகச் செயலிழப்பு அதற்குக் காரணம் என்பது தெரியவந்தது.

உயிரிழந்த அந்தக் குழந்தைகள் அனைவரும் குறித்த இருமல் மருந்துகளை உட்கொண்டிருந்தமை விசாரணையில் கண்டறியப்பட்டது.

விசாரணையில் அந்தக் குழந்தைகளின் சிறுநீரகத் திசுவில் டை எத்திலீன் கிளைகால் எனப்படும் இரசாயன வேதிப்பொருள் இருந்தது ஆய்வறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டது. பெயிண்ட், மை போன்றவற்றைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இந்த இரசாயனம், சம்பந்தப்பட்ட இருமல் மருந்துகளில் கலந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

இதையடுத்து தமிழக மருந்து கட்டுப்பாட்டுத் துறை துணை இயக்குநர் தலைமையிலான குழுவினர், இந்த மருந்தை உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் கடந்த இரண்டு நாட்களாக ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின் முடிவுகள் வெளியாகும் வரை, பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழகம் முழுவதும் குறித்த மருந்து விற்பனையையும் விநியோகத்தையும் நிறுத்தி வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (க-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தத்திற்குத் தயார் ஹமாஸ் அமைப்பு அறிவிப்பு

## நிம்மதிப் பெருமூச்சு விடும் காசா மக்கள்

(காசா)

**காசாப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்மொழிந்த அமைதித் திட்டத்தை ஏற்று, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் இஸ்ரேலுடனான போரை நிறுத்துவதற்கு ஹமாஸ் அமைப்பு பச்சைக் கொடி காட்டியுள்ளது.**



அமெரிக்க ஜனாதிபதியின் திட்டத்தை ஏற்று அறிக்கை வெளியிட்ட ஹமாஸ் அமைப்பு, இஸ்ரேல் பிடித்து வைத்துள்ள பாலஸ்தீன கைதிகளுக்கு ஈடாக உயிருள்ள இஸ்ரேல் பணய கைதிகளையும், உயிரிழந்த கைதிகளின் உடல்களையும் ஒப்படைக்க சம்மதிப்பதாக தெரிவித்துள்ளது.

அமைதி திட்டத்தில் உள்ள மற்ற சில அம்சங்கள் குறித்து மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர்கள் மூலம் பேச்சு வார்த்தை நடத்த விளைவதாகவும் ஹமாஸ் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. தற்போது ஹமாஸ் வசம் உயிருள்ள 22 இஸ்ரேல் பணய கைதிகளும், உயிரற்ற 26 இஸ்ரேல் கைதிகளின் உடல்களும் இருப்பதாக கூறப்படுகிறது.

அமைதி ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமான பணய கைதிகள் விடுதலைக்கு ஹமாஸ் ஒப்புக்கொண்ட நிலையில் காசா மீதான தாக்குதல்களை உடனே நிறுத்துமாறு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுக்கு ட்ரம்ப் கட்டளையிட்டுள்ளார்.

இந்நிலையில், காசாவில் தாக்குதல் நடத்துவதை இஸ்ரேல் இராணுவம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும், பணயக்கைதிகளை விடுதலை செய்ய ஒப்புக் கொண்ட ஹமாஸ் அமைப்பு, அதை உடனடியாக செய்ய வேண்டும் என்றும், மேலும் தாமதம் ஆகுவதை பொறுத்துக் கொள்ள மாட்டேன் என்றும் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் அமைப்பினர் பலரை பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றனர். இதைத்தொடர்ந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக இஸ்ரேல், பாலஸ்தீன நகரமான கர்சா மீது நடத்தி வரும் கொடூரத் தாக்குதலில் அதிகளவில் பெண்கள், குழந்தைகள் உட்பட 67 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன் பட்டினிச் சாவுகளும் அதிகரித்து வருகின்றன.

அத்துடன் காசாவின் 99 விகிதமான கடடடங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டிருப்பதாகவும் இவை இயல்புக்கு வர குறைந்தபட்சம் 50 தொடக்கம் 60 ஆண்டுகள் வரை ஆகும் எனவும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (க-8)

# கண்டதை எல்லாம் விழுங்கும் கோள் ஆச்சரியத்தில் உறைந்த விஞ்ஞானிகள்



(வோஷிங்டன்)

வினாடிக்கு 600 கோடி தொன் பொருட்களை விழுங்கும் புதிய கோள் ஒன்றை விஞ்ஞானிகள் அடையாளம் கண்டுள்ளனர்.

அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையமான நாசா ஆராய்ச்சியாளர்கள் மற்றும் உலகம் முழுவதும் உள்ள விண்வெளி ஆய்வாளர்கள், வளிமண்டலத்தில் உள்ள கோள்கள் பற்றி தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த 2008 ஆம் ஆண்டு புதிய கோள் ஒன்றை கண்டுபிடித்தனர். அந்த கோளுக்கு 'சா 1107 - 7626' என்று பெயர் சூட்டியுள்ளனர். வழக்கமாக ஒரு கோள் ஏதாவது ஒரு நட்சத்திரத்தை சுற்றி வரும். நாம் வாழும் பூமி எனப்படும் கோளானது, சூரியன் என்ற நட்சத்திரத்தை சுற்றி வருகிறது.

ஆனால் புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட கோள் எந்த ஒரு நட்சத்திரத்தையும் சுற்றாமல் தனித்து உள்ளது. மேலும், இந்த கோளானது வளி மண்டலத்தில் தூசு மற்றும் மற்ற பொருட்களின் மோதல்கள் காரணமாகவோ அல்லது அந்த பொருட்கள் ஒன்றாக இணைவதன் மூலமாகவோ உருவாகவில்லை என்பதை விஞ்ஞானிகள் ஏற்கனவே கண்டுபிடித்தனர்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக இந்த கோளானது கிடைத்த பொருட்கள் அனைத்தையும் விழுங்கி வருகிறது. இப்படி அனைத்து பொருட்களையும் விழுங்கும் வகையில் இந்த கோள் இருப்பது விஞ்ஞானிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்த கோள் ஒவ்வொரு வினாடியும் தனது சுற்று வட்ட பாதையில் உள்ள 600 கோடி தொன் தூசி மற்றும் வாயு பொருட்களை விழுங்கி வருகிறது.

பொதுவாக, நட்சத்திரங்களை சுற்றும் கோள்கள் மட்டுமே இது போன்று பொருட்களை தனக்குள் சேர்த்து வளர்ச்சி அடையும் என்று விஞ்ஞானிகள் ஏற்கனவே கருதினார்கள்.

ஆனால் விண்வெளியில் தனியாக உள்ள ஒரு கோள் இவ்வளவு வேகமாக பொருட்கள் அனைத்தையும் விழுங்கி வளர்வதை பார்ப்பது இதுதான் முதல் முறை என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த 'சா 1107 - 7626' கோளின் தீவிர வளர்ச்சியானது, நட்சத்திரங்கள் உருவாகும்போது நடப்பது போலவே அதன் காந்த புலத்தால் தூண்டப்படுகிறது என்று விஞ்ஞான்கள் நம்புகின்றனர்.

இந்த கண்டுபிடிப்பு விண்வெளி ஆராய்ச்சியில் ஒரு பெரிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது. இந்த புதிய கோளின் நடவடிக்கைகளை விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர் மாத இராசி பலன்கள்

## பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும்



**கிரகநிலை-** ராசியில் செவ்வாய், புதன் - பஞ்சம ஸ்தானத்தில் சனி (வ), ராகு - பாக்கிய ஸ்தானத்தில் குரு - லாப ஸ்தானத்தில் சுக்கிரன், கேது - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன் என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் பயணத்தின் மூலம் லாபம் உண்டாகும். நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். சொத்துக்களை வாங்க எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும்.

இதுவரை இருந்த தொய்வு நீங்கும். லாபம் அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக்கொள்வீர்கள்.

முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். காரியங்களைச் செய்து முடிப்பதில் திறமை வெளிப்படும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி தேடி வரும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். கூடுதல் பணி காரணமாக உடல் சோர்வு உண்டாகலாம். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும். பகைவர்களால் ஏற்பட்ட தொல்லை நீங்கும். பெண்கள் திட்டமிட்டபடி எதையும் செய்து முடிப்பீர்கள். கலைத் துறையினருக்கு வீண் பழி உண்டாகலாம்.

வேலைகளில் எதிர்பாராத சிக்கலைச் சந்திக்க வேண்டி இருக்கலாம். அரசியல்வாதிகளுக்கு கூடுதல் பணிச்சுமையை ஏற்க வேண்டி இருக்கும். புதிய பதவிகள் வரும். மாணவர்களுக்குக் கல்வியில் வெற்றி பெற எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். சக மாணவர்களுடன் நல்லுறவு காணப்படும்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். உங்கள் திறமை மேம்படும். கோரிக்கைகள் நிறைவேறும். விரும்பிய இடத்திற்கு பணியிடமாற்றம் கிடைக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை கிடைக்கும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பார்கள் சிலருக்கு முக்கிய பொறுப்புகள் வந்து சேரும். வேலையின்றி தவிக்கும் படித்தவர்களுக்கு வேலை கிடைக்கும்.




**சுவாதி:** இந்த மாதம் தந்தையுடன் கருத்துப் பரிமாற்றம் செய்யும் போது கவனம் தேவை. வேலை செய்யும் இடங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். பண விடயங்களில் தேர்ந்தெடுத்து முதலீடு செய்யவும். தூங்கப் போகும் முன் குலதெய்வத்தை வணங்கி விட்டு செல்லவும். தேவையற்ற வீண் குழப்பங்கள், கற்பனைகள் வேண்டாம்.

**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழிலை விரிவுபடுத்திக் கொள்ள சரியான சமயம் இது. கலைத் துறையினருக்கு ஓரளவு முன்னேற்றம் கிடைக்கும். தாங்கள் மேன்மையடைந்திட புதிய வாய்ப்புகள் வந்து சேரும். சிலருக்கு வெளிநாட்டு வாய்ப்புகள் வரலாம். அதிலும் கலைத்துறையில் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட துறைகளில் இருப்பவர்களுக்கு வாய்ப்புகள் குவியும்.

**பரிகாரம்:** ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு மஞ்சள் வஸ்திரம் அர்ப்பணித்து வணங்கி வர எல்லா நன்மைகளும் வந்து சேரும்

**சந்திராஷ்டம தினங்கள்:** 10, 11, 12 .

**அதிஷ்ட தினங்கள்:** 19, 20, 21.

## வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும்



**கிரகநிலை-** சுக ஸ்தானத்தில் சனி (வ), ராகு - அஷ்டம ஸ்தானத்தில் குரு - தொழில் ஸ்தானத்தில் சுக்கிரன், கேது - லாப ஸ்தானத்தில்சூரியன் - விரய ஸ்தானத்தில் செவ்வாய், புதன் என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் புதிய நபர்களின் நட்பு ஏற்படும். உடல் சோர்வு ஏற்பட்டு நீங்கும். சில்லறைப் பிரச்சனையை சமாளிக்க வேண்டி இருக்கும்.

பணம் இருந்தும் உரிய நேரத்தில் கைக்கு கிடைக்காமல் தாமதமாக வரும். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். புதிய ஓடர்கள் கிடைப்பதில் தடைகள் உண்டாகலாம்.

வீண் அலைச்சலும், பண விரயமும் இருக்கும். மனதில் வியாபாரம் பற்றிய கவலை ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். அலுவலகப் பணிகளை கூடுதல் கவனமுடன் செய்வது நல்லது.

குடும்பத்தில் நிம்மதி குறையும்படியான ஏதாவது சம்பவங்கள் நடக்கலாம். நண்பர்கள் உறவினர்களிடம் கவனமாகப் பேசி பழகுவது நல்லது. தாய், தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

பெண்கள் எந்த ஒரு காரியத்தையும் செய்யும் முன் தீர ஆலோசனை செய்வது நல்லது. கலைத்துறையினருக்கு வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும். வராது என்று நினைத்த பொருள் வந்து சேரலாம்.

அரசியல்வாதிகளுக்கு மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும். தன லாபம் அதிகரிக்கும்.

மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் அடைய கடின உழைப்பு தேவை. எல்லோரிடமும் அனுசரித்து செல்வது நல்லது. விளையாட்டில் ஆர்வம் உண்டாகும். பாடங்களைக் கவனமாகப் படிப்பது முன்னேற்றத்துக்கு உதவும்.




**விசாகம் 4 ஆம் பாதம்:** இந்த மாதம் ஆடை ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். புதிய வீடு கட்டும் பணியோ அல்லது நிலம் வாங்கும் பணியோ மேற்கொள்வீர்கள். மிக நல்ல பலன்களை தடையின்றி அனுபவிப்பீர்கள். திட்டமிட்ட சில காரியங்களைச் சிறப்பாக முடிப்பீர்கள்.

**அனுஷம்:** இந்த மாதம் வரவுக்கு எந்த வித குறையும் இருக்காது. எதிர்பாராத அதிஷ்டம் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். உங்களுடைய கோரிக்கைகளை மேல் அதிகாரிகள் ஏற்று நடப்பார்கள்.

**கேட்டை:** இந்த மாதம் வருமானத்தில் எந்தக் குறையும் இருக்காது. உடன் பணி புரிவோரிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும். சிலர் எதிர்பாராத இடமாற்றத்தை சந்திக்கலாம். சொந்தத் தொழில் புரிவோர் சிறிது சிரத்தை எடுத்து உழைக்க வேண்டியிருக்கும்.

**பரிகாரம்:** வேப்பிலையை அம்மனுக்கு சாற்றி வழிபட்டு வர குழப்பங்கள் நீங்கும். எதிர்ப்புகள் அகலும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 13, 14

**அதிஷ்ட தினங்கள்:** 22, 23;

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## முளைவிட்ட பயறு



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

முளைவிட்ட பயற்றை முதலில் சுகாதாரமான முறைகளில் தயார் செய்ய வேண்டும். இதனை சுலபமாக நாம் வீட்டிலேயே தயார் செய்யலாம். பயறை நன்றாக நீர் ஊற்றி இரண்டு, மூன்று தடவை கழுவி நீரை இறுத்து, பின்பு அப்பயற்றிற்கு புதிய நீரை ஊற்றி 12 மணிநேரம் ஊறவிட்டு பின்பு வடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு மூடி Heat box இல் இப் பாத்திரத்தை வைத்து மீண்டும் 12 மணிநேரம் கழித்து எடுத்து பார்க்க நன்கு முளை விட்டிருக்கும் இவ் முளைகட்டிய பயறை சாப்பிடுவதால் ஆரோக்கியத்திற்கு என்ன நன்மைகள் என்று பார்த்தால் இதில் உள்ள உயிர்ச்சத்து C மற்றும் செலானியம் சத்துக்கள் முடி கொட்டுதல் பிரச்சினை உள்ளவர்களுக்கு சிறந்தது.

முடியினுடைய வேர்கள் பலவீனமாகி முடிகள் உதிருகிறது.

இதிலிருக்கும் மேற்படி சத்துக்கள் முடிகளின் வேர்களை பலமாக்கி முடி உதிர்தலை தடுக்கிறது.

மற்றயது தோல் மிருதுவாகவும், சுருக்கங்கள் இல்லாமல் இளமையான தோற்றத்திற்கு இம் முளைகட்டிய பயறிலுள்ள உயிர்ச்சத்து B1 மற்றும் ஒமேகா- 2- கொழுப்புக்கள் எனும் நல்ல கொழுப்புக்கள் உதவுகின்றன.

எனவே நீரிழிவு நோயாளிகள், வயதானவர்கள் மட்டுமல்ல வளரும் குழந்தைகளும் தாராளமாக பயன்படுத்தலாம்.

இதனைவிட கர்ப்பிணிப்பெண்கள், பாலூட்டும் தாய்மாரும் பயன்படுத்தலாம். ஆனால் நீண்ட நாட்களுக்கு முளைகட்ட விட்டால் அதிலுள்ள ஈரப்பதனில் பங்கசு, பக்றீரியா தொற்றுக்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

எனவே 24 மணிநேரம் முளை கட்டவிட்டால் போதுமானது. எது எப்படி எனினும் வீட்டிலேயே சுகாதார முறைப்படி தயாரிப்பது சிறந்ததாகும்.

மலச்சிக்கல் ஏற்படுவதை தடுக்கும் ஆஸ்மா, தாக்கம் ஏற்படுவதையும் குறைக்கும். ஜீரணமண்டலத்திற்கு நன்மைபயக்கக்கூடியது. இலகுவில் சமிபாடு அடையக்கூடியது.

முளைகட்டிய பயறில் இருக்கும் இரும்புச் சத்தானது குருதிச்சோகை ஏற்படுவதை தடுக்கின்றது.

இதனால் தான் கர்ப்பிணிப் பெண்களும் சாப்பிடலாம்.

தினமும் சாப்பிடுவதை தவிர்க்கலாம். வாரத்தில் இரண்டு தடவைகள் சாப்பிடலாம். அதுவும் காலை நேரத்தில் சாப்பிடலாம். மேலும் எடை குறைக்க விரும்புபவர்கள் கூட இம் முளைகட்டிய பயறை பயன்படுத்தலாம். கெட்ட கொலஸ்ரோலின் அளவையும் குறைக்கக் கூடியது. இதில் காணப்படும் உயிர்ச்சத்து A கண்பார்வை மற்றும் நிர்ப்பீடனத்தை அதிகரிக்கவும் உதவுகிறது.

இம் முளைவிட்டதானியங்கள் எமது மூதாதையரினால் பாரம்பரிய உணவு



களில் முக்கிய இடம் வகித்தமையும் மறந்துவிடக் கூடாது. முளைவிட்ட பயற்றை சலாட்டாகச் செய்தும் பயன்படுத்தலாம். இதற்கு அளவாக தக்காளி, பெரிய வெங்காயம், குடைமிளகாய், கரட், கெக்கரி, இவை எல்லாவற்றையும் பொடிப்பொடியாக வெட்டி முளைவிட்ட பயற்றுடன் சேர்த்து தேவையான அளவு உப்புத்தூள், மிளகுத்தூள் சேர்த்து கலந்து சாலட்டாக தயார் பண்ணிக் கொள்ளவும்.

அதி உயர் குருதி அமுக்கம் சிறுநீரகப்பிரச்சினைகள் உள்ளவர்கள்மட்டும் உப்பைத் தவிர்த்துக் கொள்ளவும். மற்றப்படி எல்லோரும் இவ் சலாட்டினைப் பயன்படுத்தலாம். முளை கட்டியபயறு ஒருதேக்கரண்டி அல்லது இரண்டு தேக்கரண்டி பச்சையாகவே சாப்பிட்டால் சிறந்த பலனைக் கொடுக்கும். இப்படிச் சாப்பிட்டால் முழுச்சத்துக்களும் எமது உடலிற்கு கிடைக்கும். பச்சையாகச் சாப்பிட முடியாதவர்கள் நீராவியில் சிறிது வேகவைத்து பயன்படுத்தலாம் எனினும் சிறிது போசனைகள் ஆவியாகிவிடும். இம் முளை கட்டிய பயறை சிறிது தயிரில் கலந்து கூட சாப்பிடலாம்.

இதை விட குறைவான கலோரி அதிக நார்ச்சத்து வலுவானபுரதச்சத்து, போலேட்டு செப்புச் சத்து முதலியனவும் முளை கட்டிய பயற்றில் காணப்படுகின்றன. சாதாரண பயறுகளை விட இவற்றில் ஊட்டச்சத்துக்கள் அதிகம். இவற்றில் இருக்கும் ஓமெகா அமிலம் முடி வளர்ச்சிக்கு உதவுகின்றது. ஆதிக அளவில் ஆன்டி ஒக்சிடன்கள் இருப்ப தால் ஹோமோன்கள் சீராக சுரக்க வழி வகுக்கின்றன. புற்றுநோயை எதிர்க்கும் ஆற்றலைத் தருகின்றன.

முளை கட்டிய பயறுகளில் உள்ள உயிர்ச்சத்து B மென்மையான சருமத்தைத் தருகிறது. சருமம் புத்துணர்வு பெற உதவும். இவற்றில் இருக்கும் சிலிக்கா நியூற் றியன்கள்(Silica Nutrients)சருமத்தில் ஏற்படும் செல் இழப்பைத் தவிர்த்து, செல் பாதிப்பைத் தவிர்த்து செல் மறு சீரமைப்புக்குத் துணை புரிகிறது. அதிகப்படியான ஆன்டி ஒக்சிடன்கள் இதில் உள்ளதால் நமது உடலில் ஏற்படும் DNA மாற்றத்தை கட்டுப்படுத்த இது உதவுகிறது.

பெண்கள் சிறுவயதிலே பூப்பெய்துவதைத் தடுக்கிறது. இவற்றில் உள்ள பொட்டாசியம் உடலில் இரத்த ஓட்டம் சீராக உதவுகிறது.

உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதயத்தில் இரத்த குழாய் அடைப்பு ஏற்படுவது போன்றவற்றைத் தடுக்கிறது. முளைகட்டிய பயறுகளை Sproutede green grams என அழைப்பர்.

இதில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால் சாப்பிட்ட பிறகு நீண்ட நேரம் பசி எடுக்காது அத்துடன் இவற்றிலுள்ள நார்ச்சத்து செரிமான மண்டலத்தை சீராக வைத்திருக்க உதவுகின்றது.

இவை புரதம் மற்றும் ஆற்றல் நிறைந்தது என்பதால் காலையில் உணவாக எடுத்துக் கொள்வது உடலுக்கு நன்மை பயக்கும். நம் பாரம்பரியம் சுட்டிக்காட்டிய ஆரோக்கிய உணவு வகைகளில் முக்கி யமானவை முளைவிட்ட பயறுகள். நீரிழிவு நோயாளிகள் வாரத்தில் 3 நாட்கள் ஒரு கப் அளவு முளைகட்டிய பயறை சாப்பிட்டு வர உடலில் சர்க்கரையின் அளவு கட்டுப்படும்.

அதிக அளவு உடல் உழைப்பு உள்ளவர்கள் கூட இதனைக் காலையில் எடுக்கலாம். ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளவர்கள் வாரத்தில் 3 நாட்கள் சாப்பிட்டு வர உடல் உறுதி யாகும் ஆனால் முளைவிட்ட பயறு களை எண்ணெயில் பொரித்து சாப்பிடக் கூடாது.

# இராசிபலன்

06.10.2025
புரட்டாதி 20 , திங்கட்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 11.48 மணிவரை
பூராட்டாதி காலை 6.14 மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 5.08 மணிவரை
சுப நேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32 - 9.02 மணிவரை
பூரணை விரதம்,ஆசிரியர் தினம்
சந்திராஷ்டமம், பூரம்.


வளவன்


மேஷம்

பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும்.


கடகம்

கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள்.


துலாம்

தலைமைப்பதவிகள் உங்களைத் தேடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.


மகரம்

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பில் அக்கறை கூடும். பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையுண்டு.


ரிஷபம்

முன்னேற்றத்திற்கு உதவியவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வாகன சுகமுண்டு.


சிம்மம்


வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.


விருச்சிகம்


புண்ணிய காரியங்களில் அதிகம் ஆர்வம் காட்டுவீர்கள், தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி கூடும் நாள், பிறர் உதவியுண்டு.


கும்பம்


எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள்.


மிதுனம்


பேச்சைக்குறைத்து செயலில் தீவிரம் காட் | Tiï ^ , குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செய்தொழில் முன்னேற்றம் காணும் நாள்.


கன்னி

குதூகலம் தரும் பயணமொன்று ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள் போசன சுகமுண்டு.


தனுசு

ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும்.


மீனம்

திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, போசன சுகமுண்டு.

**முடியாது என்று நினைப்பதை முதலில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 878





27 ஆம் அத்தியாயம்
பொக்கிஷ நிலவறையில்

பூங்குழலி மந்தாகினி தேவியை விட்டுப் பிரிந்த இடத்தில் நாம் இப்போது அந்த மாதரசியைத் தொடர்வது அவசியமாகிறது. அவள் கூட்டத்திலும் குழப்பத்திலும் மறைந்துவிட்ட காரணம் பற்றி ஆழ்வார்க்கடியான் கூறியது உண்மையேயாகும். வேளக்காரப் படையுடன் தொடர்ந்து கோட்டைக்குள் பிரவேசித்த கூட்டத்தில் மந்தாகினி, ரவிதாஸன் என்னும் சதிகாரனைப் பார்த்து விட்டாள். ஏதேனும் ஒரு புலன் குறைவாயுள்ளவர்களுக்கு மற்றப் புலன் நன்கு இயங்குவது இயல்பல்லவா? மந்தாகினிக்கோ காது கேளாது. வாய் பேசாது. அவ்வளவுக்கு அவளுடைய கண் பார்வை கூர்மையாயிருந்தது. ஆழ்வார்க்கடியானும், பூங்குழலியும் மந்தாகினி தேவியையே கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஆகையால் அவர்கள் கண்ணிற்குப் படாத ரவிதாஸன் மந்தாகினியின் பார்வைக்கு இலக்கானான்.

வரப் போகும் நன்மை தீமைகளை முன்னாலேயே அறிந்து கொள்ளக் கூடிய இயற்கையான உணர்ச்சி அறிவும் மந்தாகினிக்கு இருந்தது. ஆதலின் ரவிதாஸன் ஏதோ தீய காரியத்துக்காகவே இங்கே வந்திருக்கிறான் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். ஏற்கெனவே ஈழ நாட்டில் அருள்மொழிவர்மனை ரவிதாஸன் கொல்ல முயன்றதையும் அவள் அறிந்திருந்தாள் அல்லவா! ஆதலின் கூட்டத்தோடு கூட்டமாகத் தஞ்சையின் வீதிகளில் சென்ற போது அவள் பார்வை ரவிதாஸனை விட்டு அகலவில்லை.

குழப்பத்தின் உச்சமான நிலையில் சின்னப் பழுவேட்டரையர் குதிரை மேலேறி வந்த சமயத்தில் ஜனக்கூட்டம் சடசடவென்று கலைந்ததல்லவா? அச்சமயம் ரவிதாஸனும் இன்னொரு மனிதனும் ஒரு சந்து வழியில் அவசரமாகப் புகுந்து செல்வதை மந்தாகினி பார்த்தாள். உடனே அந்தத் திசையைக் குறிவைத்து அவளும் வேகமாகச் சென்று, அதே சந்து வழியில் பிரவேசித்தாள்.

இது நிகழ்ந்த ஒரு நிமிட நேரத்தில், ஜனக் கூட்டத்தினால் மோதித்தள்ளப்பட்ட திருமலையும், பூங்குழலியும் மந்தாகினியைக் கவனிக்க முடியவில்லை. பிறகு பார்த்தால் அவளைக் காணவில்லை. மந்தாகினி சந்து வழியில் புகுந்து பிறகு இரண்டொரு தடவை திரும்பிப் பார்த்தாள். பூங்குழலியும் திருமலையும் வருகிறார்களோ என்று அவர்களைக் காணவில்லை. ஆனாலும் ரவிதாஸனைத் தொடர்வதே, முக்கியமான காரியம் என்று எண்ணிச் சென்றாள்.

இந்த வரலாற்றின் ஆரம்பத்தில் வந்தியத்தேவன் காலாந்தக கண்டரின் ஆட்களிடமிருந்து தப்பிச் சென்ற வழியிலேயே ரவிதாஸனும் அவனுடைய தோழனும் சென்றார்கள். ரவிதாஸனுடைய தோழனையும் முன்னம் நாம் சந்தித்திருக்கிறோம்.

திருப் புறம்பயம் பள்ளிப்படையிலே நள்ளிரவு சதிக் கூட்டத்திலே நாம் பார்த்த சோமன் சாம்பவன் என் பவன் தான் அவன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஏமாற்றிப் பிழைக்க நினைத்த நரி



(04.05.2025 அன்றைய தொடர்ச்சி)

இதை உங்கள் அம்மாவிடம் சொன்னால் அடுத்த நாளே உங்கள் இருவரையும் தூக்கிக் கொண்டு போக ஏற்பாடு செய்துவிடுவேன் என்று பயமுறுத்திவிட்டு சென்றது.

அன்று அம்மாக் கரடி கொண்டுவந்தவைகளை கரடிக்குட்டிகள் பதுக்கி வைத்து சாப்பிட்டு விட்டதாக தாயிடம் பொய் சொல்லிவிட்டன. சொன்னபடியே மறு நாள் தாய்க்கரடி சென்றவுடன் நரி வந்தது. அதனிடம் அம்மாக்கரடி கொண்டு வந்து கொடுத்தவற்றை கொடுத்துவிட்டன. நரியும் அவற்றை பெற்றுக் கொண்டு தினமும் இதே மாதிரி கொடுக்க வேண்டும் என பயமுறுத்தி விட்டு சென்று விட்டது.

இப்படியே ஒரு வாரம் ஓடி விட்டது. அம்மாக் கரடி கஷ்டப்பட்டு கொண்டு வருபவைகளை எல்லாம் குட்டிக்கரடிகள் நரியாரிடம் கொடுத்ததால், குட்டிக்கரடிகள் மெலிந்துகொண்டே போக ஆரம்பித்தன. தாய்க்கரடி இவைகளை கண்டு ஏன் இப்படி மெலிந்து கொண்டே போகிறீர்கள் என்று கேட்க முதலில் சொல்ல மறுத்த குட்டிகள் பின்னர் அம்மா வற்பு றுத்தவே நரி வந்ததையும், தினமும் சாப்பிட எல்லா வறையும் கொடுக்க வேண்டும் என்று மிரட்டி விட்டு சென்றதையும் சொல்லிவிட்டன.

அப்படியா விடயம் என்று நினைத்துக்கொண்ட தாய்க்கரடி மறுநாள் நான் சொல்கிறபடி செய்யுங்கள் என்று குட்டிகளின் காதில் ரகசியமாய் சொன்னது. மறு நாள் வழக்கம்போல தாய்க்கரடி குட்டிகளிடம் சொல்லிவிட்டு கிளம்பிச் சென்றது. அதை மறைந்திருந்து பார்த்த நரி மெல்ல குட்டிகள் இருந்த குகைக்கு வெளியே வந்து குட்டிகளை அழைத்தது. வெளியே வந்த குட்டிகள் தன் அம்மா சொல்லியிருந்தபடி நரியாரே இன்று நிறைய திண்பண்டங்களை அம்மா கொண்டு வந்து விட்ட தால் அவைகளை தூக்கிக் கொண்டு வெளியே வர முடியவில்லை, ஆகவே நீங்கள் உள்ளே வந்து உங்களுக்கு தேவையானவற்றை சாப்பிட்டு செல்லுங்கள் என்றது. நரிக்கு வாயில் எச்சில் ஊறியது. இருந்தாலும் பயம் வந்தது. உள்ளே யாராவது இருக்கிறார்களா என்று கேட்டது. யாரு மில்லை நீங்கள் உள்ளே வாருங்கள் என்று அழைத் தன. சந்தோசத்துடன் உள்ளே நுழைந்த நரி எங்கே உங்கள் அம்மா கொண்டு வந்தவைகள்? என்று கேட்க இன்னும் கொஞ்சம் உள்ளே போகச் சொல்லியது. ஆசையில் பின்னால் என்ன உள்ளது என கவ்னிக்காத நரி இன்னும் கொஞ்சம் உள்ளே வந்தது.

நரியின் பின்னால் "வெளியே செல்வதாகச் சொல்லிச்சென்ற தாய்க் கரடி பாய்ந்து உள்ளே வந்து நரியின் வாலைப் பிடித்து சுழற்றி தரையில அடிக்க நரியார் "ஐயோ" என்று சுவற்றில் அடிபட்டு கீழே விழுந்தது. எழுந்து வெளியே ஓடப் பார்த்த நரியை விட்டு விடாமல் தாய்க்கரடி அடி அடி என அடித்து துவைத்து விட்டது.

(அறிமுகமில்லாதவர்கள் எது சொன்னாலும் நம்பாமல் மற்றவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்வது நல்லது).

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் ஒவ்வொருவரிடமும் நல்லவைகளைக் காண்பதே இனிமையான தன்மையாகும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நெடுந்தீவில் எரிபொருள் நிலையம் அம்மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம்

யாழ்.மாவட்டத்தில் தீவகம் கைவிடப்பட்ட பிரதேசமாயிற்று. எவரும் தீவக மண்ணைக் கவனிப்பதாக இல்லை. அதிலும் வடக்கு மாகாண நிர்வாகத்தால் ஓரங்கட்டப்பட்ட பிரதேசமாக தீவகம் உள்ளது.

இதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா? என்று நீங்கள் கேட்டால், கல்வி அடைவு மட்டத்தில் இலங்கையிலுள்ள அத்தனை கல்வி வலயங்களிலும் தீவகக் கல்வி வலயமே கடைசி இடத்தில் உள்ளது என்ற ஆதாரம் போதுமானதாகும்.

இங்கு விசித்திரம் என்னவென்றால், கடைசி இடத்தை எடுப்பதற்கும் வலயக்கல்வி அலுவலகம் அதற்கு ஆளணி மற்றும் வாகனங்கள் தேவையாக இருப்பதுதான்.

எனினும் இதுபற்றியெல்லாம் இங்கு குறிப்பிட்டால் அது விரோதமாகுமேயன்றி, பயன்தராது என்பதால் அதை அப்படியே விட்டுவிடலாம்.

ஆனாலும் தீவகத்தில் குடியிருக்கின்ற மக்களுக்கும் அங்கு படிக்கின்ற மாணவர்களுக்கும் வடக்கு மாகாண நிர்வாகம் செய்கின்ற வஞ்சகத்துக்கு நிச்சயம் அவரவர் இறைவனால் தண்டிக்கப்படுவர் என்பது சத்தியமான உண்மை என்பதோடு அதனை ஒருபுறம் வைத்துவிடலாம்.

இப்போது நாம் இங்கு பிரஸ்தாபிக்க முன்வந்த விடயம் நெடுந்தீவில் எரிபொருள் நிலையம் அமைப்பதற்கு அரசாங்கம் முன்வந்திருப்பதாகும்.

ஆம், நெடுந்தீவு எங்கள் தமிழர் வரலாற்றில் மிகவும் முக்கியமான பிரதேசம். அதாவது தமிழர்களின் இராசதானியில் நெடுந்தீவு கணிசமான முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொள்கிறது.

ஒரு காலத்தில் நெடுந்தீவுக்கும் நாகப்பட்டினத்துக்கும் கடல்வழிப் போக்குவரத்து இருந்துள்ளது உறுதி செய்யப்படுகிறது.

அந்தக் காலத்தில் பட்டினத்துக்குப் போகின்றோம் எனக் கூறுகின்ற சொற்பிரயோகம் உண்டு. இங்கு பட்டினத்துக்குப் போவதென்பது நாகபட்டினத்தையே குறிப்பதாகும்.

அதாவது நெடுந்தீவில் இருந்து நாகப் பட்டினம் செல்வதையே பட்டினம் போகிறோம் எனக் குறித்துரைக்கிறது.

இதுதவிர, பசுத்தீவு எனவும் மூலிகைத் தீவு எனவும் அழைக்கப்பட்ட நெடுந்தீவு இன்று கவனிப்பாரற்று இருப்பது வேதனைக்குரியது.

தவிர, ஆழ்கடல் மத்தியில் இருக்கக்கூடிய நெடுந்தீவில் வாழுகின்ற மக்களின் அடிப்படைத் தேவைகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை. அங்குள்ள வீதிகள் குன்றும் குழியுமாகக் கிடக்கின்றன.

வடமாகாணத்தில் முதன்மைக்குரிய சுற்றுலாத்தளமாக இருக்க வேண்டிய நெடுந்தீவு கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது.

இந்நிலையில் நெடுந்தீவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரசாங்கம் முன்வந்திருப்பது உண்மையில் வரவேற்கப்பட வேண்டும்.

ஆம், நெடுந்தீவில் எரிபொருள் நிலையம் அமைவது அந்த மக்களுக்கான வரப்பிரசாதமாகும்.

# வரலாற்றில் முதன் முறையாக நெடுந்தீவில் எரிபொருள் நிரப்பு நிலையம் - பிமல்

(நெடுந்தீவு)

இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக நெடுந்தீவில் எரிபொருள் நிலையத்தை ஸ்தாபிப்பதற்கான ஒப்பந்தம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் எட்டப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

இந்தத் திட்டம் இலங்கைக் கடற்படையின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் நெடுந்தீவு வாழ் மக்கள் கொழும்பில் உள்ள அதே விலையில் எரிபொருளைப் பெற்றுக் கொள்ள இது வழிவகுக்கும்.

தற்போது தீவகத்தில் உள்ள மின்பிறப்பாக்கிக்கு எரிபொருளைக் கொண்டு செல்ல சுமார் ஏழு மணிநேரம் எடுப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர் புதிய எரிபொருள் நிரப்பும் நிலையம் செயற்படத் தொடங்கியவுடன் 45 நிமிடங்களுக்குள் எரிபொருளை வழங்கக் கூடிய வசதி கிடைக்கும்.

இந்தத் திட்டம் இரண்டு கட்டங்களாகப் பூர்த்தி செய்யப்படும் என்றும் முதல் கட்டத்திற்காகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 50 மில்லியன் ரூபாவை முதலீடு செய்யும்.

தேசிய மற்றும் மத ஒற்றுமைக்கு உறுதியளிக்கும் அரசாங்கத்தின் கீழான ஒருங்கிணைந்த முன்னேற்றத்தின் புதிய சகாப்தத்தை இந்த வளர்ச்சி குறிப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நயினாதீவு அம்மன் கோவில் வரை மக்கள் சமாதானமாகவும் ஒரே படகிலும் ஒன்றாகப் பயணிக்கக்கூடிய ஒரு காலத்தை இந்த நிர்வாகம் உருவாக்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ந-7)

## வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் சந்தேக நபரொருவர் கைது

வெளிநாட்டு சிகரெட்டுக்களை சட்டவிரோதமாக நாட்டிற்குக்கொண்டு வந்த ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை (05) அதிகாலை விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் புத்தளம், கற்பிட்டியைச் சேர்ந்த 44 வயதுடைய நபர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடமிருந்து 30 ஆயிரம் "பிளாட்டினம்" சிகரெட்டுக்கள் அடங்கிய இரண்டு பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி 4.5 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)

## லொறி - பஸ் விபத்து மூவர் உயிரிழப்பு

(குருநாகல்)

நாரம்மல - குருநாகல் வீதியில் நாரம்மல நகருக்கு அருகில் லொறி ஒன்று இலங்கைப் போக்குவரத்துக்குச்சபைக்கு சொந்தமான பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை (05) அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநாகலிலிருந்து நாரம்மல நோக்கிப் பயணித்த லொறி கட்டுப்பாட்டை இழந்து வீதியின் வலது பக்கத்தை விட்டு விலகி கட்டுநாயக்கவிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிப் பயணித்த பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் லொறிச் சாரதி மற்றும் பஸ்ஸில் பயணித்த ஆண் ஒருவர், பெண்கள் இருவர் மற்றும் சிறுவர்கள் இருவர் ஆகியோர் காயமடைந்து நாரம்மல மற்றும் குருநாகல் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி லொறியின் சாரதி உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் நாரம்மல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## மருதங்கேணிப் பகுதியில் வெடிகுண்டுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மருதங்கேணிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டலாய்பகுதியில் தனியார் காணியில் இருந்து வெடிக்காத நிலையில் மூன்று வெடிகுண்டுகள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

குறித்த காணியினை காணி உரிமையாளர் துப்பரவு செய்து கொண்டிருந்த வேளையிலேயே வெடிக்காத நிலையில் வெடிகுண்டுகள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்திய நிலையில், சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் அனுமதியுடன் வெடிகுண்டுகளை மீட்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-7)

## எல்பிட்டியவில் துப்பாக்கிச் சூடு

(எல்பிட்டிய)

எல்பிட்டிய, ஓமத்த பகுதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் சனிக்கிழமை (04) இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற அடையாளம் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் எவ்வித உயிரிழப்போ, காயமோ ஏற்படவில்லை.

எனினும் வீட்டின் ஜன்னல் ஒன்று சேதமடைந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை.

அதே நேரத்தில் இந்தச் சம்பவம் போதைப்பொருள் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதற்குப் பழிவாங்கும் விதமாக நடத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டியப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## தே.ம.சக்தி அரசுக்கு எதிராக அணிதிரளும் எதிர்க்கட்சிகள்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு எதிராக மாபெரும் எதிர்ப்புப் பேரணியைக் கொழும்பில் மேற்கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்ட முக்கிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பங்கேற்ற கலந்துரையாடலிலேயே குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

16

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள்? தேசாதிபதி றொபின்சன்? நிகழ்த்திய உரையைவன்மையாகக்? கண்டித்தனர். இதன்பேறாக உணவுப்? பொருட்கள்? ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன.

கூட்டவையின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு ஐரோப்பியரினதும், இலங்கையரினதும் 2500க்கு மேற்பட்ட கைச்சாத்துக்களைக் கொண்ட மனுப்பத்திரம் ஒன்று, மகாராணி விக்ரோறியாவுக்கு அனுப்புவதற்கென தயாரிக்கப்பட்டது. இம் மனுப்பத்திரத்தை, ஆள்பதி (தேசாதிபதி) றொபின்சன், 1866 ஏப்ரலில் 23 ஆம் நாள் திகதியிடப்பட்ட அறிக்கையுடன் இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார். அதில் ஐரோப்பிய தோட்டத்துரைமார் நாட்டின் பொது மக்களுக்காக வாதாட அருகதையற்றவர்களெனக் காரசாரமாக எடுத்துரைத்தார். "ஐரோப்பியர்கள், தலைநகரத்தையும் கோப்பிப் பிரதேசத்தையும் தவிர்ந்த தீவின் ஏனைய பகுதிகளைப் பற்றி சொற்பமே அல்லது ஒன்றுமே அறியாதவர்கள். அவர்கள் தனித்து, அல்லது தமது வர்க்கத்தினர் நலன்களைப் பெறும் நோக்குடன்தான் குடியேற்றத்தின் வரவுகளின் மேல் ஆதிக்கம்பெற முயற்சிக்கின்றனர்," எனக் குறிப்பிட்டார்.

இலங்கைக் கூட்டவை அதி செல்வாக்குடையதாகக் காணப்பட்டு அதன் கோரிக்கைகள் அரசாங்கத்திற்குப் பெரும் நெருக்கடியைக் கொடுத்தன. எனினும் அரசாங்கத்தோடு ஒத்துழைக்காது தங்களது அரசியல் உரிமையைப் பெறமுடியாது எனவுணர்ந்து இலங்கை கூட்டவையைச் சேர்ந்த உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கு முகமாக இலங்கைக் கூட்டவையைக் கலைத்தனர்.

பல்வேறு விதமான கிளர்ச்சிகள் காலத்துக்குக் காலம் தோன்றின. உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களுள்? ஐரோப்பிய பிரதிநிதியாகவிருந்த என். கிறிஸ்ரி அவர்கள் இரு பிரேரணைகளைச் சட்டவாக்கச்சபையில் பிரேரித்தார். ஒன்று, உத்தியோக அங்கத்தவர்கள் தம் இச்சைப்படி பேசவும் வாக்களிக்கவும் உரிமை வழங்கப்படல் வேண்டும். இரண்டு, சட்டவாக்கச் சபையில் அவர்களது பங்கு வரையறுக்கப்படல் வேண்டும். ஆனால் இப் பிரேரணைகள் தோல்வியடைந்தன.

காரணம், உத்தியோக அங்கத்தவர்களுள் எவரேனும் சாதகமாக வாக்களிக்காததும் உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் அனைவரும் வாக்கெடுப்பின் போது சமூகமளிக்காமையுமேயாகும். ஜோஜ் உவால், கிறிஸ்தபர் எலியட், என். கிறிஸ்ரி முதலிய பிரமுகர்களின் கிளர்ச்சிகளின் விளைவாக தானியவரி நீக்கப்பட்டது.

இலங்கைக் கூட்டவை கலைக்கப்பட்டபோதிலும், ஐரோப்பியரும், பறங்கியரும்? இலங்கையரோடு சேர்ந்து சட்டவாக்கச் சபையில் உத்தியோகத்தரல்லாதோர்? தொகை பெரும்பான்மையாயிருக்க வேண்டுமென்று கிளர்ச்சிகள் செய்யலாயினர், கோல்புறூக் ஆணைக்குழு ஆங்கிலமே அரசாங்க மொழியெனப் பிரகடனப்படுத்தியதும் இலங்கையர் தீவிரமாக மிஷனரி சங்கங்களினால் நிறுவப்பட்ட பாடசாலைகளிற் சேர்ந்து அம் மொழியிற் பாண்டித்தியம் பெற்று வரலாயினர்.

இவர்களிற் பலர் அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கத் தலைப் பட்டனர். இத்தகையோர் கல்வித் துறையிலும், பொருளாதாரத்துறையிலும் அதிமுன்னேற்றமடைந்தனர். 'இவர்களே மத்திய வகுப்பினரென அழைக்கப்படலாயினர். இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், கனடா முதலிய தேசங்களிலே எழுந்த புரட்சிகரமான இயக்கங்களும் அவற்றின் பல்வேறு அரசியற்றத்துவங்களும் மத்திய வகுப்பினரின் கவனத்தை ஈர்த்தது. அவர்கள் ஜனநாயக ரீதியில் சிந்திக்கத் தலைப்பட்டனர்.

**இலங்கையர் அரசியற் சீர்திருத்தங்கள் கோரிக் கிளர்ச்சி**

1885 ஆம் ஆண்டில் இந்தியாவில் நிறுவப்பட்ட இந்திய காங்கிரஸ் மத்திய வகுப்பினரை மேலும் கண்விழிக்கச் செய்தது. பொதுவாக இலங்கை இந்தியாவைப் பின்பற்றிக் கிளர்ச்சிகள் செய்வதற்கான ஆன்ம சத்தியையும் வீர உணர்ச்சியையும் பெற்றனர். இலங்கையர் அரசியற் சீர்திருத்தங்கள் கோரிக் கிளர்ச்சிகள் செய்தனர். அவர்களது கோரிக்கைகளில் இலங்கையருள் 3.49 வீதம் எழுத்தறிவுள்ளவர்களாக இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்குத் தேர்தல்கள் மூலம் பிரதிநிதித்துவம் வழங்கப்படல் வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். மேலும் அவர்கள், 8,72,000 கண்டிச் சிங்களவரும் 2,26,000 முஸ்லிம்களும் சட்டவாக்கச்சபையில் பிரதிநிதித்துவமின்றி இருப்பது விசனத்திற்குரியதெனவும் தேசாதிபதியால் நியமனம் பெற்ற பிரதிநிதிகள் தானும் ஆயுள் அங்கத்தவராக இருப்பது பொருத்தமானதல்லவெனவும் சுட்டிக்காட்டினர்.

தற்சமயம் பிரித்தானிய பேரரசினால் இவர்களது கோரிக்கைகளை உதாசீனப்படுத்த முடியவில்லை, அதனால் 1889 ஆம் ஆண்டு சட்டவாக்கச்சபையில் ஒரு மாற்றம். கொண்டு வரப்பட்டது. அதாவது சட்டவாக்கச்சபையிலுள்ள உத்தியோகத்தரல்லாதோரின் தொகை ஆறிலிருந்து எட்டாக அதிகரிக்கச் பட்டுக் கண்டிச் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதித்துவம்? அளிக்கப்பட்டது.

தற்போது உத்தியோகத்தரல்லாதோரின் விபரம் பின்வருமாறு - ஐரோப்பியர்-3, பறங்கியர்-1, தமிழர்-1, தாழ்பூமிச் சிங்களவர் -1, கண்டிச் சிங்களவர்-1, முஸ்லிம்கள்-1. எனினும் உத்தியோக அங்கத்தவர் தொகை பெரும்பான்மையாகவே இருந்தது என்பது கவனிக்கத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரை இலங்கையின் அரசியல் வளர்ச்சியை அநேகமாக ஐரோப்பியரே நிர்ணயித்து வந்தனர். இருபதாம் நூற்றாண்டு ஆரம்பமானதும். மத்திய வகுப்பினரின் செல்வாக்கு அதிகரிக்க அதிகரிக்க இலங்கையர் தீவிரமாக அரசியற் போராட்டத்தைக் கொண்டு நடத்தினர். இதைக் கண்ணுற்ற ஐரோப்பியர் அரசாங்கத்தை ஆதரிக்கத் தொடங்கினர். ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தாம்பெற்ற சலுகைகள் காலகதியில் குன்றவே பறங்கியர் இலங்கையரை ஆதரிக்கலாயினர்.

1903 ஆம் ஆண்டு சட்டவாக்கச்சபையில் உத்தியோகத்தரல்லாத ஐரோப்பிய உறுப்பினருள் ஒருவராகிய ஜே.என். கம்பல், கரும நிருவாகக் கழகத்தில் இரு உத்தியோகத்தரல்லாதோர் இடம் பெற வேண்டுமென ஒருபிரேரணையைக் கொண்டு வந்தார். அப் பிரேரணை தேசாதிபதி றிட்ஜ்வே அவர்களால் தகவுரை செய்யப்பட்டதெனினும் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரால் நிராகரிக்கப்பட்டது.

1904 ஆம் ஆண்டு ஜப்பானியர் ரஷ்யா மீது போர்செய்து வெற்றி பெற்றனர். ஜப்பானியரது வெற்றி இலங்கையரது உள்ளத்தில் தேச உணர்ச்சியை வீறிட்டு எழச்செய்தது. இந்தியத் தேசியத் தலைவர்களான கோபாலகிருஷ்ண கோகலே, மகாத்மா காந்தி ஆகியோரின் சொல்லம்புகளையும் கிளர்ச்சிகளையும் ஊர்ந்து கவனித்த இலங்கையர் மேலும் உற்சாகமடைந்தனர்.

பிரித்தானியர் ஆளுகின்ற இனம், இலங்கையர் ஆளப்பட வேண்டிய இனம் என்னும் எண்ணம் மாறி பிரித்தானியரிலும் பார்க்க இலங்கையர் எவ்வகையிலும் குறைந்தவர்கள் அல்ல என்ற எண்ணம் அவர்களது உள்ளத்தில் வேரூன்றியது. இவர்கள், பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமே உண்மையான பிரதிநிதித்துவமாகையால் அது தங்களுக்கு அளிக்கப்படல் வேண்டுமெனவும், கரும நிருவாகக் கழகத்தில் உத்தியோகத்தரல்லாதோர் இடம்பெற்றால் தான் அரசாங்க அந்தரங்க ஆலோசனைகளில் அவர்கள் பங்குபற்ற முடியுமெனவும், சிறுபான்மையினருக்கு விசேடமாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படல் வேண்டுமெனவும் வாதாடினர்:

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாதாளக்குழு...

அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

சட்டத்தின் பிரகாரம் பொலிஸார் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் அதிகாரிகள் முறையாக விசாரணைகளை மேற்கொண்டு ஊழல்வாதிகளைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துகிறது. சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

ஊழல்வாதிகள் மற்றும் அரச நிதியை மோசடி செய்தவர்களைக் கைது செய்யும்போது அதனை அரசியல் பழிவாங்கல் என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள். அரசியல் பழிவாங்கல்களை முன்னெடுக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது.

கெஹல்பத்தரே பத்மே உள்ளிட்ட பாதாளக் குழுக்களின் உறுப்பினர்களை நாட்டுக்கு அழைத்து வந்த தினத்தில் இருந்து எதிர்க்கட்சியினர் கலக்கமடைந்துள்ளார்கள்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கெஹல்பத்தரே பத்மே உட்பட ஏனையவர்கள் பயன்படுத்திய 31 தொலைபேசிகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பாதாளக் குழுக்களின் உறுப்பினர்களான கெஹல்பத்தரே பத்மே உள்ளிட்ட தரப்பினரிடம் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விரைவில் பல உண்மைகள் வெளிவரும் என்றார். (ந-7)

## திஸ்ஸ விகாரை...

யாழ்ப்பாணம் தையிட்டிப் பகுதியில் அமைந்துள்ள, திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் குறித்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறியும், அதனை அங்கிருந்து அகற்றுமாறு கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதன்போது வலியுறுத்தியுள்ளனர்.

ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்றும் குறித்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டு, கைகளில் கறுப்புக் கொடிகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ந-7,104)

## மாங்குளத்தில்...

குறித்த காணியின் ஒரு பகுதி பற்றைக் காடாகக் காணப்படுகின்ற நிலையில் அந்தப் பகுதிக்குச் சென்ற ஒருவர் எலும்புக்கூட்டை அவதானித்த நிலையில் மாங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற மாங்குளம் பொலிஸார் குறித்த இடத்தைக் குற்றப் பிரதேசமாக அடையாளப்படுத்தி விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

எலும்புக்கூடு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

## ஏழாலையில்...

வர்த்தக நிலையத்துக்கு மதுபோதையில் சென்ற இரு இளைஞர்கள் மிக்சர் பைக்கற்றுக்களைத் தருமாறு கேட்டுள்ளனர்.

ஆனால் ஏற்கெனவே கடனுள்ள காரணத்தால் வர்த்தக நிலைய உரிமையாளர் அவற்றைக் கொடுக்க மறுத்தார்.

இதன்போது முரண்பாடு ஏற்பட்டுள்ளது. மதுபோதையில் இருந்த இளைஞர்கள் நடத்திய கத்திக் குத்தில் குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கத்திக் குத்தை மேற்கொண்ட இரு இளைஞர்களும் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (ந-7,104)

## வாகன...

முற்பட்ட பொழுது எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம்தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர். (ந-7,104)

## சமுத்...

பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் புடைசூழ வல்லிபுரமாயவன் சமுத்திரத் தீர்த்த மாடவுள்ளார். (ந-7)

## போதை...

யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதியில் போதைப்பொருட்கள் மற்றும் ஒரு தொகைப் பணத்துடன் 51 வயதான சந்தேகநபர் ஒருவர் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது எட்டுக் கிராம் ஹெரோயின், 16 கிராம் ஐஸ், 120 போதை மாத்திரைகள் என்பனவும் இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் ரூபாய் பணத் தொகையும் குறித்த சந்தேகநபரிடம் இருந்து மீட்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-7,33)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

சாவகச்சேரியில் மீண்டும் பேரதிர்ஷ்டம்
எமது விற்பனை மூலம் 30.09.2025 அன்று நடைபெற்ற மகஜன சம்பத டிக்கெட் மூலம் அதிர்ஷ்டசாலி ஒருவர் இருபத்தைந்து லட்சம் ரூபாய் வென்றுள்ளார்.
எனது லொத்தர்கள் விற்பனையாகும் இடங்கள்.
- சாவகச்சேரி பிரதேச செயலகம் அருகில் (பிரதான விற்பனை நிலையம்)
- சாவகச்சேரி BOC வங்கி முன்
- மீன் சந்தை வாசல், அரசடி சந்தி, புத்தூர் சந்தி (A9 வீதி),
- கைதடி பிள்ளையார் கோவில் முன்.
யாழ்.மாவட்டத்தின் அதிகூடிய சுப்பர் பரிசு விற்பனையாளர் (6 கோடி 11 லட்சம்)
என்றென்றும் அதிர்ஷ்டத்தின் மறுபெயர்
K.பிரதாஸ் Chavakachcheri. (C-4041)

மஹஜன சம்பத — திகதி 2025.10.05 — சீட்டிழுப்பு இலக்கம் 5973 — Q 9 5 7 1 0 1
அத சம்பத — Q 7 1 0 1 — சீட்டிழுப்பு இலக்கம் 548 — National Lotteries Board

சுப தவசக் — 2025.10.05 — 0089 — இடபம் 01 38 52 53

தன நிதானய — திகதி - 2025.10.05 — சீட்டிழுப்பு இலக்கம் - 2003 — Z 04 50 57 60 Z — Double Chance

மெகா பவர் — திகதி 05/10/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2321 — T 03 03 16 25 49

ஜய — திகதி 2025.10.05 — சீட்டிழுப்பு இலக்கம் 0241 — X 2 7 5 4

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4215 — சீட்டிழுப்பு திகதி 05.10.2025 — N 10 30 34 60 — N — தேசிய லொத்தர் சபை

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.10.05 — சீட்டிழுப்பு 1282 — கடகம் 09 11 42 47 கடகம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 05.10.2025 — வெற்றி வாரம் 0681 — D — 6 3 7 2 3 2 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,753,670.40 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2947 — சீட்டிழுப்பு திகதி 2025.10.05 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 18 50 61 64 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,986,321.60

சனிதா — திகதி 05.10.2025 — வெற்றி வாரம் 5108 — 04 37 59 74 L — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,821,942.80 — ரூ. 50,000/-

சசிரி — 0785 — 05.10.2025 — ஞாயிற்றுக்கிழமை — 06 10 21 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4659 — சீட்டிழுப்பு திகதி 05.10.2025 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 18 22 38 45 கும்பம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — 2123 — 05.10.2025 — M 24 09 23 28 53 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.598,266,641.60

அட கோடிபதி — ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2773 — 2025.10.05 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,979,168.00 — 21 33 46 51 M — ரூ.100,000/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாப்பிள்ளை தேவை

01. சுழிபுரம், இந்து, 1997, சித்திரை, MBBS, MD, MBA, Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 38047
02. கோண்டாவில், இந்து, 1994, அவிட்டம், Grauated பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 53069
03. காரைநகர், இந்து, 1997, ஆயிலியம், Software Engineer (Uwa wellassa University) பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 52973
04. வேலணை, இந்து, 1983, MBBS, Doctor, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 53687
05. கச்சேரியடி, இந்து, 1979, பூராடம், UK Grauated, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 50933
06. கந்தர்மடம், இந்து, 1989, ஆயிலியம், BSc, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 32157
07. தெல்லிப்பழை, இந்து, 1989, உத்திராடம், Optometrist, Divorce, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 30571
08. உடுப்பிட்டி, இந்து, 1994, கேட்டை, MSc, Mechanical Engineer, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 31484
09. புன்னாலைக்கட்டுவன், இந்து, 1990, புனர்பூசம், Bussiness and Finance UK degree, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 37878
10. கோப்பாய், இந்து, 1997, அஸ்வினி, MSc, Biomedical Junior Scientist, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 35467

(5598)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P | www.thaalee.com | 077 539 3728

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- முதல் 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-4043)

V2 TRAVELS | v2vacancies@gmail.com | 076 1410725 | 076 8226236

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் K.K.S வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.

(5327)

**076 663 3199**

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3670/- |
| 11-16 Kg | 2640/- |
| 21-27 Kg | 2440/- |

- குறைந்த விலை - நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4043)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/- | Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS | 076 822 6241 | 076 822 6237

## மணப்பெண் தேவை

01. யாழ்ப்பாணம், இந்து, 1985, ரேவதி, Computer Engineer, Germany Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 31625
02. வட்டுக்கோட்டை, இந்து, 1983, கேட்டை, Charted Accountant, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 24770
03. கோப்பாய், இந்து, 1984, சதயம், MBBS Doctor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 32160
04. திருநெல்வேலி, இந்து, 1990, விசாகம், MBBS Doctor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 32016
05. கரவெட்டி, இந்து, 1986, அத்தம், Graduate, Quantity Surveyor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 29720
06. மீசாலை, இந்து, 1988, சதயம், MSC Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 29216
07. கொழும்புத்துறை, Romancatholic, 1993, அத்தம், MSC, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 32886
08. ஊர்காவற்துறை, Romancatholic, 1991, Administration Accounting, Working in Royal Bank Of Canada, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 28799
09. கந்தர்மடம், இந்து, 1989, உத்தராடம், MSC, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
10. கைதடி - வரணி, இந்து, 1994, கார்த்திகை, Hons in Phsycology, Goverment Job, Divorce, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 51091

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

(5598)

S.Sharma J.P | www.thaalee.com | 077 539 3728

## மகாவிஷ்ணு கட்டடப்பொருள் விற்பனை நிலையம்



தரமான பொருட்கள் மிகக் குறைந்த விலையில் நீங்கள் இருக்கும் இடத்திற்கு நாங்கள் கொண்டு வந்து தருவோம்.

- 1 ரக்டர் 5 நூல் சல்லி – 16,000/= ரூபா
- 1 ரக்டர் டஸ்ற் – 12,000/= ரூபா
- அத்திவாரக் கல் (6X9) – 15,000/= ரூபா

(இந்த விலையில் பறித்து விடப்படும்)


(5568)

ஏனைய கட்டடப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளலாம்.

பழைய கடை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இல.530, நாவலர் வீதி | 077 905 0185, 077 847 0341 | உரிமையாளர் : வ.ராசு

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம் 06.09.1948 | மறைவு 08.09.2025

கடந்த 08.09.2025 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் தெய்வம்

### அமரர் தணிகாசலம் சிவகணேசன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (07.10.2025) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் ஊறணி புனித தீர்த்தக் கரையில் அமைந்துள்ள அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்**

(1627)

நெடியகாடு, வல்வெட்டித்துறை.

தகவல் : குடும்பத்தினர்கள்

## ஐ.நா.பேரவை...

மலாவி, மொண்டினீக்ரோ மற்றும் வடக்கு மெசிடோனியா ஆகியன செயற்படுகின்றன.

இந்த நிலையில் 22 நாடுகள், முக்கியமாக ஐரோப்பிய நாடுகள் ஒக்ரோபர் முதலாம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, திருத்தப்பட்ட வரைவுத் தீர்மானத்திற்கு இணை அனுசரணையாளர்களாகக் கையொப்பமிட்டுள்ளன.

இலங்கைத் தீர்மானத்தை ஆதரிக்கும் 27 நாடுகளில் பத்து நாடுகள் தற்போதைய சுழற்சிக்கான, ஐக்கிய நாடுகளின் உறுப்பினர்களாக உள்ளன.

இந்தநிலையில், குறித்த தீர்மானம் ஒக்ரோபர் 8 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இதேவேளை, ஆணை நீடிப்பானது இலங்கையை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு மனித உரிமை பேரவையின் மேற்பார்வையின் கீழ் வைத்திருக்கும்.

அதேநேரம், இலங்கையின் பொறுப்புக்கூறல் திட்டத்தின் காலமும் இந்தத் தீர்மானத்தின் மூலம் நீடிக்கப்படும்.

(ந-7)

## தொழிலாளி...

பெண்களிடம் தகாத வார்த்தைப் பிரயோகம் செய்ததாகத் தெரிவித்தே குறித்த நபர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பலத்த தாக்குதல் காரணமாகக் குறித்த நபர் அவலக்குரல் எழுப்பும் சம்பவம் காணொளியில் வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(ந-7,104)

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| சிகையலங்கரிப்பாளர் | 0779858327 |
| Software Technician | 0775566129 |
| Student Counselor Executive | 0776953717 |
| Medicine Store Assistant | 0752217661 |
| Painter | 0773580547 |
| Technical Officer | 0773580547 |
| முகாமையாளர் | 0777738783 |
| Brand Promoters | 0755555546 |
| Tea Maker | 0740943967 |
| மேசன் | 0773580547 |
| Visa Application Assistant | 0772155933 |
| Hotel Manager | 0771006394 |
| புடவையக வேலையாட்கள் | 0766323554 |
| Chef | 0773090868 |
| குசினி உதவியாளர் | 0777917753 |
| தச்சு வேலையாட்கள்(Carpenter) | 0773580547 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக யாழ் வேலைவாய்ப்புகளுக்கு :

**dewmasweb.com**

வேலையாட்கள் தேவையா?

**07777 333 68**

(5589)

DEWMAS, 51, Amman Road, Nallur

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org